சிலம்பு ௩௪	திருவள்ளுவர் ஆண்டு ௧௯௯௧, வைகாசி தூன், 1960	பரல் ௧௦

அச்சுக்கு வாராத அருந்தமிழ்ச் செல்வங்கள்

ஒவ்வொரு நாட்டின் பண்பாடும், நாகரிகமும், செல்வ வளமும், நிலவளமும், நீர் வளமும், கடல், மலை, காடு முதலிய காவல் வளமும் பிறவும் அவ்வந் நாட்டின் தொன்மையினையும் முன்னேற்றத்தினையும் அங்கை நெல்லியென எடுத்துக்காட்டுங் கருவூலங்களாகும். மேலை நாட்டவரும் பிறரும் தத்தம் நாட்டின் வரலாறுகளைக் காலவரையறையுடன் எழுதிவைத்துள்ளனர். நம் தமிழக வரலாறு அங்ஙனம் பண்டைக் காலத்திருந்து எழுதி வைக்கப்படவில்லை. அதனால் வரலாற்று மெய்ம்மை காணுதற்குச் சிறிது இன்னலாகவே இருக்கின்றது. எனினும் தோலா நாவின் மேலோராகிய நல்லிசைப்புலவர்கள் அவ்வப்போது வேந்தர், மன்னர், புரவலர், போற்றும் வள்ளல்கள் முதலியோரைப் பாடிய எழின்மிகு தனிப்பாடல்களும், அகத்திணைச் செய்யுள்களாக ஆக்கியமைத்த அரும்பெரும் பாடல்களும், சேரர் வரலாறுகளாகக் காணப்படும் பதிற்றுப்பத்து முதலிய நூல்களும் சங்கத் தொகை நூல்களாகத் திகழ்ந்து தமிழக வரலாற்றை ஒருபுடையாக விளக்குகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தொடர்நிலைச் செய்யுட்களும், அன்ன பண்பினவே. தேவாரம் முதலிய திருமுறைகள், மெய்கண்ட நூல்களும், திருவாய்மொழி, பட்டினத்தார், குமரகுருபரர், தாயுமானார் முதலியோர் பாடிய பனுவல்களும் அத்தகையவே.

சிந்தாமணி, பெரியபுராணம், கம்பராமாயணம், வில்லி பாரதம், தலபுராணங்கள், கலம்பகம், உலா, பிள்ளைத்தமிழ், திருவருட்பா, சிட்டுக் கவிகள், கோவை, தூது, மடல், விலாசம்,

கொம்மி, சிந்து, பள்ளு, குறவஞ்சி, ஏற்றப்பாட்டு, கப்பற்பாட்டு, ஏசல், சதகம் முதலிய பலவகை நூல்களும் நாட்டு வரலாறு காட்டும் நற்செல்வங்களேயாம். இவ்வகை நூல்களில் அச்சுக்கு வந்தன சில; வரவேண்டுவன பல, அச்சுக்கு வந்தனவற்றுள்ளும் பல நூல்கள் மீண்டும் அச்சிடுவாரற்று இறந்து போகுந்தறுவாயி லுள்ளனவும் எண்ணில. இவையெல்லாம் ஒருபுற மிருக்க நாட்டுப் பாடல்களாக நானிலத்துள்ள உயர்ந்தோர், ஏனோர் முதலியோரால் காலமும் இடமும் நோக்கி வழிவழியாக வழங்கி வரும் பழமொழிகள், சிலேடைகள், ஏற்றப்பாடல்கள், இழுவைப் பாடல்கள், வழிநடைப் பாடல்கள், ஓடப்பாடல்கள், உழவுப் பாடல்கள், கப்பல்பாடல்கள், சீட்டுக்கவிகள், விடுகவிப் பாடல் கள், உவமைகள், மரபுச்சொற்கள், நாட்டு வழக்கமாக வழங்கும் நல்லியற்சொற்கள், செவிவழியாக வழங்கிவரும் சீரிய கதைகள், ஆங்காங்கு நிகழும்தெய்வ வழிபாட்டு முறைகள், மணவினை பிண வினை முதலியசடங்குகள், ஊர் மன்றத்தும் குடும்ப மரபினும் வழங்கும் ஆட்சிச்சொற்கள், ஒப்பாரிகள் முதலிய பலவகையான அரும் பெரும் செய்திகளும் அழகிய நூல் வடிவில் அச்சாகி வெளிவரவேண்டுவது இன்றியமையாத முதற்கடனாக இருக் கின்றது. இவைகள் வெளிவருமாயின், இப்பொழுது தமிழக வர லாற்றின் தொன்மை கணிப்பார், சாசனங்கள், கல்லெழுத்துக்கள் வெளி நாட்டவர் எழுதி வைத்துள்ள குறிப்புக்கள் முதலியன கொண்டு கணிக்கின்றதோடு இவைகளையும் துணையாகக்கொண்டு, கணிக்க நேரும்; சொற்கள் தோன்றித் திரிபின்றி வழங்கி யும், திரிந்து இடப்பெயர்ச்சியால் மாறுதல் எய்தியும் வருவதற் குரிய காலவரையறைகள் தொன்மை காண்பார்க்கு உறுதுணை யாகும் என்பதுறுதி. புதை பொருளாராய்ச்சியால் அரிது முயன்று காணும் அப்பெரும் செய்திகளினும் மிகச் சிறந்தன வாகும், நாட்டில் வழங்கிவரும் மேற்கூறிப் போந்த செய்தி களால் கிடைப்பன.

முன்னுள்ளோர் அமைத்து வெளியிட்டுள்ள தனிப்பாடற் றிரட்டு, விநோதரச மஞ்சரி, புலவர் புராணம், அபிதான சிந்தா மணி முதலியவற்றால் வெளிப்போந்த புலவர்களின் வரலாறுகளு பாடல்களும் சில நூற்றுக்கணக்கேயாகும். இப்பொழுது கழகம் வாயிலாக ஏறத்தாழ இரண்டாயிரத்தொரு நூறு புலவர்களுக்கு மேற்பட்டோர் வரலாறுகளும், அத்துணைத் தனிப்பாடல்களும் இருபத்துநான்கிற்கு மேற்பட்ட நூல்களாக வெளிவந்துள்ளன. இன்னும் வெளிவருதற்கும் இருக்கின்றன. இதுபோல் மேற் கூறிப் போந்த நாட்டுச் செல்வங்கள் வெளிவருதற்கு ஆங்காங்குள்ள புலவர் பெருமக்களும், ஏனை அன்பர்களும் பெரிதும் முயன்று ஏட்டுச்சுவடிகளையும், சுவடிகளில்லாது வழங்கி வருவனவற்றை

எழுதுவித்தும் கழகத்துக்கு அனுப்பிவைப்பார்களாயின் கழகத்தார் அவற்றை மனமுவந்தேற்று அவரவர்தம் பெயருடன் அச்சிட்டு வெளிப்படுத்த முன்னிற்கின்றனர். மேலும் இம் முயற்சிக்குத் தக்கவாறு தொகைகொடுத்துதவவும் துணிந்துள்ளனர். தொகையின் பொருட்டன்று அம்முயற்சி, தொன்மைத் தமிழ்க் கருவூலங்கள் வெளிவரும் தோலாப் புகழின் பொருட்டென்றே அன்னார் கொள்ளுதல் வேண்டும்.

இப்பொழுது நம் தமிழன்னை அரியணை வீற்றிருந்து செங்கோலோச்சுகின்றனள். அதனால் ஆட்சிமொழியும், பல்கலைக் கழகக் கற்பிக்கும் மொழியும் தமிழாகத் திகழ்கின்றன. இச் செவ்விவாய்ந்த நேரத்து நாட்டுச் செல்வங்கள் வெளிவருமேல் தமிழ் வளர்ச்சிக்கு அவை பெருந்துணையாகும். பண்டுபோலில்லாமல் இந்நாட்களில் மாவட்டத்துக்கப்பால் வட்டங்களிலும், பேரூர் சிற்றூர்களிலும் உயர்நிலைப்பள்ளிகள் இடப்பரப்பிற்கேற்றவாறு இரண்டு மூன்றுகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு பள்ளிகளிலும் புலமை சான்ற தமிழ்ப் பேராசிரியர்கள் பலர் அமர்ந்து அருந்தமிழ்ப்பணி ஆற்றிவருகின்றனர். அவர்கள் சிறிது அகனமர்ந்த அன்பினராய் நாட்டுச் செல்வங்களைத் தொகுத்தமைக்கும் நற்றமிழ்த் தொண்டில் ஈடுபடுவராயின் இப்பெருந்தொண்டு மிக எளிமையாக எழிலுற முற்றுறும். அம்மட்டோ? வழிவழி அழியாது நிற்கும் விழுமிய பெரும் புகழையுந் தரும்.

பொன்னும், பொருளும், காணியும், மனையும் பிறவும் மன்னாப் பொருள்களே, மன்னும் பொருளாயுள்ளன செந்நாப் புலவர் பாடி வழங்கியுள்ள பயனார் நூற்செல்வங்களேயாம். தமிழ் மூதாட்டியாராகிய ஒளவையாரும் இது குறித்துப் பாடிய வெண்பா வருமாறு :

“ நூற்றுப்பத் தாயிரம் பொன்பெறினும் நூற்சீலை
நாற்றிங்கள் நாளுக்குள் நைந்துவிடும்—மாற்றலர்கள்
பொன்றப் பொருதடக்கைப் போர்வேல் அகளங்கா
என்றுங் கிழியாதென் பாட்டு.”

மற்றொரு சான்றோரும் பாட்டின் பெருமையினை வருமாறு கூறுவது காண்க :

“ பூமாலைக் கேதுபுகழ் பொன்மாலைக் கேதுமணம்
பாமாலைக் குண்டே பயன்.”

செந்தமிழ்த் திருமாமறையின்கண் செந்நெறி முதல்வர்கள் அருளிய திருப்பாட்டுக்களுங் காண்க :

"பூம்படி மக்கலம் பொற்படி மக்கல மென்றிவற்றால்
ஆம்படி மக்கலம் ஆகிலும் ஆரூர் இனிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவ ரேற்றமிழ் மாலைகளால்
நாம்படி மக்கலஞ் செய்து தொழுது மடநெஞ்சமே."

—௪. ௧0௩ - ௩.

"வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலங் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்
பாட்டவி காட்டுதும் பாலவி யாமே."

—௧0. ௧௭௩.

இதுகாறுங் கூறியவாற்றால் நாட்டுப் பாடல்கள் முதலிய நற்றமிழ்ச் செல்வங்களை இறந்து பட்டுப்போகாது குறிக்கொண்டு காத்து அச்சிட்டு வெளிப்படுத்தி அனைவரும் பயனெய்துமாறு செய்யவேண்டுவதும், அவ்வாற்றால் செந்தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரியவேண்டுவதும் சீரிய புலவர் பெருமக்களின் நேரிய கடனாகும். அதனை முன்வந்து மனமுவந்து செய்து தருமாறு அவர்களைப் பன்முறையும் வேண்டிக்கொள்கின்றோம்.

வாழ்க தமிழ்மொழி! வளர்க நாட்டுப்பாடல்கள்!

பேராசிரியர், மயிலை சிவமுத்து அவர்கட்குப் பாராட்டு விழா

நனிமிகு முதுமையினும் தமிழ் நலம் நாடித் தளராது உழைத்து வரும் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்களின் தொண்டுகளைப் பலபடப் பாராட்டிச் சிறப்பித்தற்கென 10-4-60 இல் சென்னை வாழ் புலவர்களும் நண்பர்களும் கூடி, முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஒரு பாராட்டுவிழா நடத்தினர். உயர்திரு. தி. இராம லிங்கனார், எம்.ஏ , அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினர். திரு. டி. எஸ். உமாபதி எம்.ஏ., எல்.டி. அவர்கள் விழாக்குழுவின் சார்பில் **தமிழ்நெறிக் காவலர்** என்னும் சிறப்புப் பட்டப்பெயர் பொறித்த பதக்கத்தைப் பேராசிரியருக்கு அணிவித்துப் பாராட்டினர். அறிஞர் பலர் பேராசிரியர் அவர்களின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிப் பேசினர். பேராசிரியரவர்கள், பாராட்டிய பல்லோர்க்கும் தம் பண்பமை நன்றியை நயனொடு நவின்றனர். வாழ்த்தும் நன்றியும் வனப்புற நவிலக் கூட்டம் இனிது நிறைவுற்றது

உயர்திரு. மயிலை சிவமுத்து அவர்களின் தமிழ்த் தொண்டினைத் தமிழகம் நன்கு அறியும். முதுமையினும் முறுக்கேறிய உள்ளத்தோடு பேசும், எழுதும் ஆற்றல் மிக்கவர். மாணவர் மன்றத்தின் மூலம் அவர்கள் ஆற்றிவரும் தொண்டு அளப்பில. அவர்தம் புகழ் தமிழகத்தில் என்றும் நின்று நிலவுவதாக. பேராசிரியர் அவர்கள் மேலும் பல்லாண்டுகள் நலமுடன் வாழ்ந்து நற்றமிழ்ப் பணிபுரிய எல்லாம் வல்ல அம்மையப்பர் அருள்புரிவாராக.

தமிழ்ப்புலமை சான்ற பண்டிதை

தனபால் பத்மாவதி அம்மையார் மறைவு

"தோற்ற முண்டேல் மரணமுண்" டென்பது தொன்று தொட்டு நிகழ்ந்து வரும் மாறு வுண்மையாயினும், ஒருவர் மறைவினைக் கேட்கும்போதும் காணும்போதும் அன்புடையாரெவரும் வாட்டமுறுதிரார். நிறையுணவாம் ஆன்பாலின் மாட்டு எவர்க்கும் இயற்கையிலேயே அன்பு பெருகுவது போன்று கற்றுணர்ந்து அடங்கும். புலமைசான்ற நல்லோர்மாட்டு யாவர்க்கும் ஆர்வம் பெருகுவது இயற்கையே. அவர்கள் மாந்தர்குழுவினுக்குக் கலங்கரை விளக்கமாகத் திகழும் அருட் செல்வர்களாவார்கள். அத்தகைய நெறியினின்ற நீர்மையர் நம் அம்மையாரவர்களாவர். அம்மையாரின் மறைவு ஈடுசெய்ய வொண்ணாப் பேரிழப்பே யாகும்.

மேலும் அம்மையாரின் உயிரனைய தமக்கையார் பண்டிதை கிருட்டிணவேணியம்மையாரின் நிலைமையை உன்னித்து நோக்கும்போது இன்னும் ஆற்றொணுத் துன்பத்தையே தருவதாகும். அவ் வம்மையாருக்குக் கழகத்தாரின் ஆழ்ந்த ஆறுதலுரை உரியதாகுக. ஆண்டவனும் உள்ளம் ஆறுதலெய்த அருள்புரிவானாக.

விழுமிய தமிழின் கண்ணனைய புலவர் பெருமக்களிருவரும் தமிழ்ப்புலமை எய்தித் தமிழ்ப்பணி புரிந்தமை சால வியப்புடைத்தாம். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சென்னைப் பெத்துநாய்க்கன்பேட்டை, கொண்டித் தோப்பு முத்துக்கிருட்டினன் தெருவில் திருவாளர் முத்துக்கிருட்டிண நாயுடு அவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர் வீட்டிற்கு எதிர் வீட்டில் திருவாளர் வல்லை சண்முகசுந்தர முதலியாரவர்கள் வாழ்ந்து வந்தனர். முதலியாரவர்கள் தமிழ்ப்புலமை சான்றவர்கள். நாயுடு அவர்களின் தாய்மொழி தெலுங்கு. நாயுடு அவர்கட்குத் தவப் புதல்வியராகக் கிருட்டிணவேணி அம்மையாரவர்களும், பத்மாவதி அம்மையாரவர்களும் முறையே தோன்றினர். தமக்கையாரவர்கள் கிருட்டிணவேணியம்மையார். அவர்கள் முதலியாரவர்கள்பால் செந்தமிழ் பயின்றார்கள். உடனிருந்து கேட்டுக்கொண்டுவந்த தங்கையாராகிய பத்மாவதி யம்மையாரும் தமிழ் பயில்வாராயினர். பயின்று புலமை நிரம்பினர். நூலுரைகள் யாக்கவும் அரிய சொற்பொழிவுகள் ஆற்றவும், கற்பிக்கவும் ஆற்றல் வாய்ந்தவர்களாயினர். பலவூர்களிலும் சென்று பயனுடைய சொற்பொழிவுகள் பல ஆற்றினர். நாவன்மையோடு பாவன்மையும் பெற்றிருந்தனர். கற்பொழுக்கமும், கடவுட்கொள்கையும், ஈவிரக்கமும் நிரம்பப் பெற்றவர்கள்.

பெண்பாலார் முன்னேற்றத்தில் பெரிதும் நாட்டமுடையவர். அதற்கென உழைத்த ஆக்கத்தினர். அம்மையாரின் தோற்றம் 1896 ஆம் ஆண்டாகும். ஏறத்தாழ அரை நூற்றாண்டுகளுக்கு முன் தாய்மொழி தெலுங்காயிருந்தும் தமிழ்மொழிக்கண் ஆர்வ முற்றுக் கற்றுப் புலமை பெறுதற்குரிய இனிய வாய்ப்புக்கள் உண்டாவதற்குக் காரணம் தமிழ் மொழியின்கண் இயல்பா யமைந்துள்ள தனிப்பெருஞ் சீர் சிறப்புக்களேயாம். தெய்வ வழிபாட்டினரை அத்தெய்வந் தன்வயமாக்கிக் கொள்வது போன்று தமிழ் மொழியும் தன்னைப் பயில்வாரைத் தன் வய மாக்கிக் கொள்வதில் என்றும் மாறா வுண்மையுடன் திகழ் கின்றது. இருவரும் ஓங்கிய ஆங்கிலமும் சோதிடமும் சமய நூல்களும் பொருவறக் கற்ற புலமையர்.

பண்டிதை எஸ். கிருட்டிண வேணியம்மையாரின் வாழ்க்கை இடையீடுபட்டு முற்றுந் தமிழ்த்தொண்டுக்கு ஒப்புவிக்கப்பட் டது உலகறிந்ததொன்றே. பண்டிதை பத்மாவதி அம்மையார் வாழ்க்கை உலகியலோடொத்த தனிப்பெரும் மாண்பமைந்த செம்மை வாழ்க்கையாகும். இவர் தம் கணவனர் திரு. தனபால அரங்கசாமி நாயுடு என்பவராவர். இவர்கள் உருவினும், திரு வினும், கல்வியினும், உயர்ந்த ஒழுக்கத்தினும் மேம்பட்டு உல கோர் போற்றத் திகழ்ந்தனர். இருவருங் கருத்தொத்து மனை யறம் பேணினர். மக்கள் பலரை யீன்றனர். மாண்புடன் வளர்த்து நன்னிலையிலமர்த்தினர்.

நம் பத்மாவதி யம்மையாரவர்கள் 1-5-1960 இல் இறை வன் திருவடி நீழலை எய்தினர். அவர்தம் ஆவி இறைநிறைவில் என்றும் இன்புறுமாக. அவர்தம் மக்கட்கும், அரிய தமக்கை யாரவர்கட்கும் கழகத்தாரின் ஆறுதலுரை உரியதாகுக.

சென்னை மாணவமன்றத்தார் தமிழ்மொழி வளர்ச்சிக்குச் செய்துபோதரும் அரியதொண்டுகள் அளப்பில. மாணவ மாணவியர்கட்கு ஊக்கமும் ஆக்கமும் உண்டாக்கும் முறையில் ஆற்றிவரும் நற்பணிகள் நனிமிகப்பல. கற்றுவல்ல இருபாற் புலவர் பெருமக்களுக்கும் கல்வி வளர்ச்சிக்காம் அருஞ் செயல் கள் பலபுரிந்து வருகின்றனர். பல வகையானும் புலவர் பெரு மக்களைப் பாராட்டி வருகின்றனர். இவ்வகையில் குறிக்கொண்டு உற்றபோதழைக்கும் ஒரு மன்றமாகத் திகழ்வது இம் மாணவர் மன்றமே. இம்மன்றம் அமிழ்தினுமினிய தமிழ் வரலாற்றுக் கருவூலமாகத் திகழ்கின்றது. இம்மன்றத்தார் நம் பத்மாவதி யம்மையார் பிரிவு குறித்து ஓர் ‘இரங்கல் மலர்’ வெளியிட்டுள் ளார்கள். மன்றத்தார் அரும்பணிகள் என்றும் வாழ்க.

சிவமயம்

*கோவில் திருப்பணியும் கோன் ஆட்சியும்

1. சாலிவாகனசகாப்தம் 945 (கொல்லம் 199இல்) மதுரை பாண்டியராஜா சேகரம் உக்கிர பாண்டியராஜா மானூருக்கு வந்து அதற்கு சமீபமாய் உக்கிரன்கோட்டையும் போட்டு அரசாண்டார். அக்காலத்தில் சங்கரநயினர்கோவில் ஆலயம் திருப்பணி உண்டானது.

2. சகாப்தம் 1017 (கொல்லம் 271 இல்) ஷெயார் குமாரர் அள்ளியுண்டராஜா திருக்குறுங்குடி சுவாமி அழகியநம்பி தெரிசனத்திற்கு வந்தபொழுது வேட்டைக்குப்போக மலைச்சார்பாய் வரும் வழியில் மலைக்குள் சுவாமி சுப்பிரமணியர் இருக்கிறதைக் கண்டு முன் மண்டபம் கட்டி வள்ளியூரை ஸ்தாபித்துப் பிரபலம் செய்தார்.

3. சகாப்தம் 1056 (கொல்லம் 310இல்) ஷெயார் குமாரர் பிராந்தராஜா அரசாண்டார்

4. சகாப்தம் 1095 (கொல்லம் 349இல்) ஷெயார் குமாரர் சீவிலிமாரபாண்டியராஜா, வள்ளியூருக்கு வந்து ஸ்வாமி தெரிசனஞ்செய்து திருப்பணியுஞ்செய்து பிற்பாடு சங்கரநயினர் கோவிலுக்குப்போய்ப் பெரியபிராகாரம் முதலிய திருப்பணி செய்தார். பிற்பாடு மானூரைப் பிரபலம் பண்ணிவைத்து ஓர் பெரியகுளமும் வெட்டினர். இவர் நாளையில் கரூர் சித்தர் திருநெல்வேலி முதலிய இடங்களைச் சபித்தது.

5. சகாப்தம் 1132 (கொல்லம் 386இல்) ஷெயார் குமாரர் வீரகேரளராஜா அரசாண்டார்.

6. (கொல்லம் 424இல்) தென்காசி ஆலயம் கட்டினது.

---

*வெளியீடு No. 1. சில முக்கிய அன்பர்களின் வேண்டுகோளின் படி தச்சநல்லூரில் நம்முடைய ஸ்வாமி வேதமூர்த்தி மடாலயத்தில் இருக்கும், சீதாள ஓலைக்கணக்கில் இருந்து திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள சில தேவஸ்தானங்களின் திருப்பணி விஷயமாயும் அரசாக்ஷி செய்தவர்களின் விபரத்தையும் எடுத்து எழுதியிருக்கிறேன்.

ஷை விபரங்கள் 1906, 1907ஆம் வருஷம் பிரசுரமான திருநாவுக்கரசு என்ற பத்திரிகையிலும் வெளியிடப்பட்டு இருக்கிறது.

இஃது நெல்லை, கர்ப்பூரப்பணிவிடை சிவசூரியப்பரதேசியால் வெளியிடப் பெற்றது.

7. (கொல்லம் 445இல்) குல்சேகரராஜா கோட்டை கட்டினது, வள்ளியூர்.

8. சகாப்தம் 1192 (கொல்லம் 446இல் வீரகேரளராஜா வம்சத்தில் உதித்த குலசேகரப் பெருமாள் ராஜா, அவர் தம்பி நால்வரும் வேட்டையாடத் திருக்குறுங்குடிக்குப்போய் ஓர் பத்திரகாளியின் உத்திரவுப்படி கோட்டையும் போட்டு (ஸ்வாமி பேர்) அருளாளப்பெருமாள், பிரதிஷ்டையும் செய்தனர்.

9. கொல்லம் (685 முதல் 714) வரை திருநெல்வேலி அரியநாயக முதலியார் அதிகாரம்

10. கொல்லம் (714 முதல் 813) வரை நாயிக்கமார் அதிகாரம்

11. கொல்லம் (813 முதல் 850) வரை வடமலையப்ப பிள்ளையன் அதிகாரம்.

12. கொல்லம் 817 முதல், புதுசேரியான் வந்து வடமலையப்பபிள்ளையன் கூட யுத்தம் செய்து அபஜயமடைந்து அன்றிரவிலேயே திருச்செந்தூர்க் கோவிலைக் கொள்ளையிட்டு கப்பல் மார்க்கமாய் ஸ்வாமியையும் தூக்கிக்கொண்டு போகையில், ஸ்வாமி கனத்தால் கப்பல் தாங்கக்கூடாமையால் ஸ்வாமியை சமுத்திரத்தில் போட்டுவிட்டான்.

13. (கொல்லம் 829இல்) ஸ்வாமியைக் கடலில் இருந்து வடமலையப்பபிள்ளையன் எடுத்துப் பிரதிஷ்டையும் செய்தனர்.

14. கொல்லம் 831இல் திருமலைநாயக்கன் பரமபதம்.

15. கொல்லம் 832இல் முத்துவீரப்ப நாயக்கனுக்கு துரைத்தனம்.

16. கொல்லம் 833 முதல் 855 வரை சொக்கப்ப நாயக்கர் துரைத்தனம்.

17. கொல்லம் 836இல் வடமலையப்பபிள்ளையனுல் சொக்கநாதன் பெருங்கால், சீவலப் பேரிக்கு வெட்டினது.

18. கொல்லம் 680 தாதுவருஷம் தைமீ 10உ திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்துக்குப் பெரிய முதலியாரால் திருவுருதுலாம் 165 கிரயம் பொன் 13612.

19. கொல்லம் 697 தாருண வருஷம் சித்திரைமீ ஷியாரால் ஸ்வாமி அறுபத்து மூவர் திருவுருவுக்குப் பொன் 17280.

20. கொல்லம் 730 காளயுக்தி வருஷம் வைகாசி மீ திருநெல்வேலிப் பெரியகொடி மரம் பிரதிஷ்டை.

21. கொல்லம் 780 சவ்ம்ய வருஷம் தை மீ திருப்பணி பண்டாரம் தருமம் (பெரிய தேர் வெள்ளோட்டம்).

22. கொல்லம் 801 பிரமோதூத ௵ தை மீ அம்மன் கோவில் கோபுரம் கட்டினது.

23. கொல்லம் 781இல் ஸ்வாமிகோவில்கோபுரம் கட்டினது.

24. கொல்லம் 811 தை மீ சேரகுளம் பிரவிப்பெருமாள் பிள்ளை தருமம் (ஊஞ்சல் மண்டபம்).

25. கொல்லம் 821 சார்வரி ௵ சித்திரை மீ வடமலையப்ப பிள்ளையன் அதிகாரத்தில் ஷியாரால் சங்கிலிமண்டபம்

26. கொல்லம் 823 சுபக்ருது ௵ ஆவணி மீ ;7½ முழத்தில் (பொற்றேர் ஓட்டம்).

27. கொல்லம் 828 கீலக௵ சிவந்தியப்பநாயக்கர் தர்மம் சந்நிதி ரிஷபக்கொடிமாமண்டபம்.

28. கொல்லம் 811 விக்கிரம ௵ ; ஆற்றங்கரை தீர்த், வாரிமண்டபம் பிறவிப்பெருமாள்பிள்ளையன் தர்மம்.

29. தென்காசி நயினர்செட்டியார் தர்மம், அழகப்ப முதலியார் அதிகாரத்தில் நயினர் குளம் வெட்டினது.

30 வடமலையப்பபிள்ளையன் தர்மம் ஸ்வாமிகோவில் சிவிலி மண்டபம் கீழ்புறம், தென்புறம் மேல்புறம் ஆறுமுகநயினர் கோவில் வரைக்கும். (ஆறுமுகநயினர் பிரதிஷ்டையும் செய்தது).

31. வடபுறம் பிள்ளையன் மச்சினன் கிழவளவு திருமலைக் கொழுந்து பிள்ளையன் தர்மம் ¾ பங்கும் ¼ பங்கு பலபேர் உபயம்.

32. ஸ்வாமிகோவில் சுற்றுப்பிரகாரத்தில் தென்னம்பிள்ளைகள் மமதீசுபுகான் அதிகாரத்தில் முத்துப்பிள்ளை தர்மம்.

33. நடுக்கோபுரவாசலுக்கு தெற்கு அருகாக மண்டபம் பிள்ளையன் உடன் பிறந்தார் தர்மம்.

34. அம்மன் சன்னதி கொடிமரத்துக்குத் தெற்கு மண்டபம் சுந்தரத்தோழபிள்ளை உபயம்

35. கருமாரி நாலுகால் மண்டபம் முதல் சிழக்குவரைக்குத் தளவாய் அழகப்பமுதலியார் தர்மம், நாலுகால் மண்டபத்துக்கு

வடக்கு மேல்புறம் முக்கால் பங்கு தளவாய் அழகப்பமுதலியார் தர்மம்.

36. மேல்புறம் கால்பங்கு வடபுறம் தெற்கு ஒரு பத்தி மண்டபம், மண்டகப்படி திருமலையப்பப்பிள்ளை தர்மம்.

37. மமதீசுபகான் அதிகாரத்தில் வெங்கிடகிருஷ்ண முதலியார் தர்மம், அதாவது:—சுந்தரத்தோழபிள்ளை வீடு முதல் மடைவைத்துப் பல்லிக்கோட்டைப் பண்டாரம் வீட்டு வழியாகக் கால்வாய் ஜலம் கருமாரிக்கு வந்து தளவாய் அழகப்ப முதலியார் மண்டகப்படி வழியாக; ஆயிரக்கால் மண்டபத்துக்கு வடக்கு அருகாமையாகக் கொடிக்கம்பத்துக்குக் கீழ்ப்புறமாக மடைவைத்துப் பொற்ருமரைக்கு வந்து கல்லத்திமுடுக்குக்கு வடபுறமாக ஆனையப்பமுதலியார் வீட்டுக்கு கொல்லை வழியாகத் தெப்பக்குளத்துக்கு ஜலம் வரும்படி மடை செய்து வைத்திருக்கிருர்.

38. பொற்ருமரையின் வடபுறம் படித்துறைக்குக் கிழக்கு மண்டபம் (ஆயம் தானப்பமுதலியார் தர்மம்)

39. வடபுறம் படித்துறைக்கு மேல்புறம் மண்டபம் வெங்கிட கிருஷ்ணமுதலியார் தர்மம்.

40. பொற்ருமரையில் கீழ்புறம் மண்டபம் பூராவும் திருவாவடுதுறை ஆதினத்தின் தர்மம்

41. பொற்ருமரையின் தென்புறம் பாதிமண்டபம் தர்மபுரம் மடம் ஆதினத்தின் தர்மம்.

42. ஷைதென்புறம் வீதம் பாதி மண்டபம் பலபேர் உபயம்.

43. அம்மன் கோவில் பிராகாரத்தில் தென்னம்பிள்ளை வெங்கிடகிருஷ்ணமுதலியார் தர்மம்.

44. மமதீசுபுகான் அதிகாரத்தில் திரிசரபுரம் சிவராம காசியாபிள்ளை தர்மம் நெல்லையம்பலம் வடிவம்பலம் தெரு மால்.

கருவூர் சித்தர்

சீவிலிமாறபாண்டியன் நாளையில், கருவூர்சித்தர் திருப்புடை மருதூர் முதலிய இடங்களைச் சபித்து விட்டு, பின் திருநெல்வேலி வந்து ஸ்வாமியை நெல்லையப்பர் என்று கூப்பிடச் சுவாமி கேளாததினுல், ஈசன் இல்லேயோ வென்று ஈசன் அங்கு

எருக்கு இங்கு, என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டு மானூருக்கு வரும்போது நெல்லையப்பர் இச்சிறந்தசிவபக்தனுடைய வலிமைக்கு மெச்சி, அடிக்கு ஆயிரம் பொன்வைத்து ஆவணி மூலத்தில் கண்டார். பின் இவர் செந்நெல் அங்கு எருக்கு இங்கு என மறுசாபம் கொடுத்துவிட்டு, மானூரிலேயே தங்கி அன்று ஒரு பிராமணர் இல்லம் புகுந்து பசிக்குச் சாதம் கேட்க, அப்பிராமணி ஏன்காணும் சத்தம் போடுரீர் என் கணவர் வயிற்று வலியால் கஷ்டப்படுகிறார் சாதம் கிடையா; மற்றோர் கிரகம் செல்லுமென. இவர் ஓ! பிராமணியே உன் கணவன் வயிற்றுவலி அகன்றிடில் என் விருப்பின்படி சாதம் போடுவாயோ என்று கேட்க அம்மாது ஆமோதிக்க வயிற்று வலியும் அகன்றது. அம்மாது இவர் விருப்பின்படி ஆடு, கோழி முதலியவைகளின் மாமிசத்தால் கறிசெய்து கொண்டு இருக்கையில், பக்கத்து வீட்டுப் பிராமணர்கள் அறிந்து அரசனிடம் தெரியப்படுத்தி அவள் கிரகத்தைப் பரிசோதிக்கையில் ஒன்றும் இல்லாமல் இருந்தது. உடனே சித்தர் கோபம் கொண்டு "அகடு, முகடு கூடினாலும் அக்கிராமம் அடுத்தவீடு கூட்டாமல் போக" என்றும், "முக்கால் விளைந்தாலும் மோருக்கு விதியற்றுப்போக" என்றும் சபித்து விட்டுத் திருச்செந்தூருக்குச் சுவாமி தெரிசனம் செய்யச் செல்லுகையில் சுப்பிரமணியர் "தம் ஆலயம் முதலியவற்றை சபிப்பார் என்று எண்ணி" வழி எல்லாம் சிவலிங்கங்களை உண்டுபண்ணி இவர் நடந்துவர ஒட்டாமல் செய்தார். பின் இவர் தலையால் உருண்டு கொண்டு தலையூண்டி மடம்வரைக்கும் வந்தார். அங்கே ஸ்ரீ சுப்பிரமண்யர் பிரசன்னமாகி, 'அப்பா நீ வந்து தெரிசனம் பண்ணிக்கொண்டு யாதொன்றையும் சபியாமல் உடனே மோக்ஷத்துக்கு வழி தேடிக்கொண்டால், இச்சங்கடத்தை நிவர்த்திக்கிறேன் என்றார். அங்ஙனமே இவர் ஒப்புக்கொள்ள, சுப்பிரமண்யர் ஊரைச்சுற்றி சிவலிங்கங்கள் இல்லாமல். இருக்கச்செய்து சுருக்கமாகப்போக வழிகாட்டினார். இவர் அங்ஙனமே போய்ச் சிவதெரிசனம் செய்து கொல்லம் 386இல் காந்தீசுரத்தில் ஒளியோடே ஐக்கியமானார்.

கொல்லம்
1104-ஆம் தை மீ 12-உ

இங்ஙனம்
ஒப்பம். இ—போ

தேவையா?

[வித்துவான் திரு. ச. சவரிமுத்து]

மாலை மூன்று மணி இருக்கும்; என் அறையகத்தில் அமைதியாகப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மாண வர் ஒருவர் எதையோ முயன்று கண்டு பிடித்தவரைப் போல என்னிடம் வந்தார். "சார் நாகரிகம் தமிழ்ச் சொல்லா?" என்றார். ஆம், அது தமிழ்ச் சொல்தான்.... அதில் உனக்கு என்ன ஐயம் இருக்கிறது? என்றேன்.

"இல்லை நாகரிகம் என்பது வட சொல் தான். ஏனெனில் மூன்றாவது "க"வின் ஒலி அதில் இருக்கின்றது? தமிழில் 'க' என்ற ஒரு ஒலி மட்டுந்தானே இருக்கின்றது. வடமொழி யிலும் இந்தியிலும் இருப்பதைப் போல நான்கு ஒலிகள் இல்லையே. எனவே அது வடசொல்தானே? இந்தியிலும் 'நாகரிக்' என்றல்லவோ வழங்கப்படுகின்றது" என்று பெரியதோர் ஆராய்ச்சி முடிவினை விளக்குவது போல விளக்கினார்.

"இல்லை தம்பி.... தமிழில் அவ்வொலிகள் இருக்கின்றன. ஆனால் நான்கு வரிவடிவங்கள் தேவை இல்லை என்பது நம் முன்னோர் முடிவாகும். அதுதான் தமிழுக்குள்ள சிறப்பு மாகும். அதோடு 'நாகரிகம்' என்ற சொல் 'நகர் + அகம்' (Civilization from Civitas - (L) - city) என்ற சொற்களை வேராகக் கொண்டு எழுந்தது. எனவே ஒரு சொல்லை ஆயும்போது, அதன் வேர்ச் சொல் எது என்று கண்டு பின்னரே அது எந்த மொழிச் சொல் என்பதை முடிவு செய்ய வேண்டும்; இவ்வாறு ஒலிமுறைகளைக் கொண்டு முடிவு கூறல் சிறந்ததன்று" எனக் கூறி அவரை அனுப்பினேன்.

இது மாணவர்கட்கு ஏற்படும் மருட்சியான எண்ணமட்டு மன்று; தமிழை நன்கு கற்றுப் புலவர்களாக விளங்கும் பேரறி ஞர்கட்கும் சிலமுறை ஏற்படும் மயக்க எண்ணமுமாகும். ஏன், "தமிழ்மொழி வேறு, வடமொழி வேறு; தமிழ் இலக்கண வரன்முறைகள் வேறு, வடமொழியின் நெறிமுறைகள் வேறு" என அறிஞர்களான் ஆய்ந்து முடிவு கூறப்பட்ட இக்காலத்திலும் வடமொழிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசும் அறிஞர் களும் இல்லாமல் இல்லை. எனவே அத்தகையோர் 'இச்சொல் வடசொல் தான்; அச் சொல் வடமொழியின் திரிபு' என் றெல்லாம் கூறித் திரிகின்றனர். இவ்வாறு கூறுகின்ற பலர் காட்டுவதெல்லாம், "இதில் மூன்றாவது 'க'வின் ஒலி இருக்

கின்றது ; இதில் இரண்டாவது 'த்'வின் ஒலி இருக்கின்றது" என்பவை தான்.

இப்படிப்பட்டவர்கள் தமிழ் எழுத்துக்களின் பிறப்பு, ஒலிப்பு முறை முதலியவைகளை நன்கு உணராததினுல்தான் இவ்வாறு பேசுகின்றனர்கள். தமிழ் எழுத்துக்கள் எல்லாம் இயல்பாய் எழும் ஒலிகளால் பிறப்பவை யாகும். நா, அண்ணம், பல், இதழ் ஆகிய உறுப்புக்களின் திரிபுகளால் பிறந்து ஒலிப்பன வாகும். மார்பு, தொண்டை, மூக்கு என்ற மூவிடங்களான் வன்மை, இடைமை, மென்மை நிலைபெற்று நிற்பனவாகும். அரிதின் முயன்று எழுப்பும் எவ்வொலியும் தமிழில் இல்லை. தமிழ் எழுத்துக்களின் பிறப்பு முறைகளையும் வரன்முறை அமைப்பு நிலையினையும் பிறமொழிகளோடு ஒப்பிட்டு ஆய்ந்து, அவைகளின் சிறப்பினைப் பல அறிஞர்கள் புகழ்ந்துள்ளனர்.

இயல்பாக வாயைத் திறந்து ஒலிக்கும்போது எழும் ஒ அகர ஒலியாகும். இவ்வொலி விலங்கினங்கட்கும் உண்டு எந்த மொழிக்கும் முதல் எழுத்து இதுவே எனப்படுவதுப இக் காரணத்தினுலேயே ஆகும்.

'அகர முதல எழுத்தெல்லாம்.'

என வள்ளுவன் வரைந்ததும் இதுபற்றியே. பின்னர் அண்பல்லினை நாவின் அடிவிளிம்பு பொருந்துவதனுலும், இதழ் குவிவதாலும் உயிர் ஒலிகள் பிறக்கின்றன. இவைகள் உயிர் எழுத்துக்கள் எனப்படுகின்றன. இவைகளே உயிர்ப்பான ஒலிகளாகும். இவைகளின் உயிர்ப்பினுலேயே இவைகள்-பிறக்கத் துணை செய்யும் உறுப்புக்களின் திரிபினுலேயே ஏனைய மெய்யெழுத்துக்கள் எழுகின்றன. அண்ணம், அண்பல் இவைகளை நாவின் முதல் இடை கடை ஆகியவை தொடுவதனுலும், வருடுவதனுலும், நன்கு பொருந்துவதனுலும், மேல் இதழ் கீழிதழ்கள் நன்கு பொருந்துவதனுலும், மேற்பல் கீழிதழ் பொருந்துவதனுலும் மூவின மெய்யெழுத்துக்கள் பிறந்து ஒலிக்கின்றன. இவைகள் வல்லெனவும், மெல்லெனவும், இடைத்திறத்தனவாகவும் ஒலிக்க மார்பும், மூக்கும், தொண்டையும் துணை செய்கின்றன. இவை உள்ளிருந்து எழும் காற்றினைக் கட்டுப்படுத்தும் மூன்று பெட்டிகள் என்றே கூறல் வேண்டும். இவ்விருவகை ஒலிகளும் சேர்ந்தொலிக்க உயிர்மெய்யெழுத்துக்கள் பிறக்கின்றன. இவைகளே தமிழ் எழுத்துக்களின் பிறப்பு முறையாகும்.

இவ்வெழுத்தொலிகள் ஒன்றோடொன்று தொடர்ந்து ஒலிக்கச் சொற்கள் பிறக்கின்றன. முன்னே செல்லும் வண்டியையும், பின்னே தொடரும் வண்டியையும் பார்த்துக் கட்டுப்படுத்திச்

செல்லும் வண்டிகளின் கோவையைப் போல இவைகள் வரன் முறை பெற்றுச் செல்லுகின்றன. சாலையின் தரம், முன் பின் செல்லும் வண்டிகளின் வேகம் மூலை முடுக்குகளின் நிலை ஆகிய இவைகளைப் பார்த்தே ஒவ்வொரு வண்டியும் வேகத்தை ஏற்றியும் இறக்கியும் செல்ல வேண்டுவது இன்றியமையாதது ஆகும். அவ்வாறே எழுத்தொலிகளும் முன்னே எழும் எழுத்தொலிக்கும், பின்னே எழும் எழுத்தொலிக்கும் ஏற்ப எடுப்புடனே, அடங்கியோ, நுடங்கியோ ஒலித்துச் செல்லுகின்றன. முன்னெழுந்த எழுத்தொலியின் பிறப்பிடமான உறுப்புக்களின் அசைவினையே பின்னெழும் ஒலியும் பெற்றதாயின் அது சற்று விரைவினிலே இழும் என எழுந்தொலிக்கும் அன்றி வேறு உறுப்புக்களின் அசைவினால் பிறப்பதாயின் விட்டெழுந்து வேகம் பெற்று ஒலிக்கும்.

சில எழுத்தொலிகள் சொற்களாய்த் தொடரும் போது குறிப்பிட்ட மாத்திரை அளவினும் குறைவு பெற்றமையும் இக் காரணத்தினாலே ஆகும். முன்னெழுந்த எழுத்தொலியின் பிறப்பிட உறுப்புக்களான் பெரும்பகுதி வாய் மூடப்படும் நிலையினை அடைவதனால் பின்னெழும் எழுத்தொலிகள் முழு ஒலி நிலையை அடைவதில்லை. உகரம் குறைந்ததும், இகரம் குறைந்ததும், மகரம் குறைந்ததும், ஐகார ஔகாரங்கள் குன்றியதும் இக்காரணத்தினாலேயே ஆகும். அவைகளை ஒலித்துக் காணின் இந்நிலை புலப்படும்.

எனவேதான் இன்ன மெய்கள் இன்ன மெய்களோடு மயங்கும், இவை இவை மயங்கா என்ற வரையறை வகுக்கப்பட்டது. தமிழ்மொழி தோன்றியபோது உறுப்புக்களின் வளரா நிலைமையான் அல்லது நன்கு திரிபுற்று வழங்கா நிலைமையான் இவை வேண்டியவாறு புழங்கா நிலைமையை அடைந்தன என்பதை நாம் உணரல் வேண்டும்.

சுற்றுப் புறத்திற் கேற்ப மனிதனின் மனநிலையும், உடல் நிலையும் மாறுபடுவதைப் போல எழுத்தொலிகளும் முன்பின் எழுத்தொலிகளான் மிக்கும் குறைந்தும் மாறுபடுகின்றன. தனித்தனியே அவைகட்குப் பிறப்பு முறை கூறப்பட்டதாயினும் ஒலிகள் தொடர்புற்று, சொற்களாகச் சேர்ந்தொலிக்கும்போது அவைகள் சிற்சில இடங்களில் சிறிது குறைந்தும், சிற்சில இடங்களில் சிறிது மிகுந்தும் ஒலிக்கப் பெறுதல் இயல்பாகும். இந்நிலை எல்லா மொழிகளுக்கும் உண்டு. ஆங்கிலம் போன்ற மொழிகளில் சில ஒலிகள் ஒலிக்கப்பெறு நிலைமையை அடைதலும் உண்டு. 'Often' என்ற சொல்லைக் காணுங்கள். 'T' என்ற எழுத்தொலி எழுதப்பட்டாலும் ஒலிக்குங்கால், முன்னுள்ள 'F'

ஒலிக்கும், பின்னுள்ள 'E' ஒலிக்கும் ஏற்ப இயைந்துவரும் பிறப்பிடத்தினை 'அது' கொண்டிராமையால் ஒலித்தல் கடினம் நோக்கி விடப்படுதல் காண்க. இவ்வாறு தமிழ்மொழியில் விடப்படுவதில்லை. இதற்குத் தமிழ்மொழியின் ஒலிப்புமுறையும், எழுத்து முறையும் ஒன்றாக இயங்குவதே காரணம், ஆகும். இது தமிழுக்குரிய ஒரு தனிச் சிறப்புமாகும். இந்த நிலை இல்லாமை ஆங்கிலம் போன்ற மொழிகளுக்குக் குறைபாடாகும். அம்மொழிகளில் எழுதப்படுவதுபோல உச்சரிக்கப்படுவதில்லை.

இதுகாறும் கூறியவற்றால் எழுத்துக்கள் முன்பின் வரும் எழுத்துக்களின் நிலைநோக்கி மிக்கும் குறைந்தும் ஒலிக்கப் பெறுவது உண்மை என்பது விளங்கும். எனவே ஒரே எழுத்தே ஒரு சொல்லில் வலிந்தொலிக்கும், வேறொரு சொல்லில் மெலிந்தொலிக்கும்; மற்றொரு சொல்லில் இடைப்பட்ட ஒலிபெற்று இயங்கும். இது எழுத்தொலி இடத்திற்கேற்பத் தன்னை இயைத்துக் கொள்ளும் இயல்பை உணர்த்தும். இவ்வாறு சிறிது மாறுபட்டு ஒலிக்கும் அவ்வொவ்வோர் ஒலிக்கும் ஒவ்வொரு வரிவடிவங்கொள்ளுதல் தேவையற்றதாகும். 'க' என்ற எழுத்தொலியை எடுத்துக் கொள்ளுவோம். 'க' என்று தனித்து ஒலிக்கும்போது எழும் ஓசைக்கும், 'கலம்' என்று சொல்லின் முதலிற் பெய்து ஒலிக்கும்போது எழும் ஓசைக்கும், 'பக்கம்', 'அகம்' என இடையில் பெய்து ஒலிக்கும்போது எழும் ஓசைக்கும், 'வாழ்க' என்ற ஈற்றிற் பெய்து ஒலிக்க எழும் ஓசைக்கும் சிறிது சிறிது வேறுபாடு இருத்தலை நோக்குக. இவ்வொலி ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு வரிவடிவத்தைக் கையாடல் தேவையற்றதாகும். இவ்வாறு நோக்கினால் 'க' என்ற எழுத்தொலியே பலவாறு திரிந்தொலிக்கும், அவை ஒவ்வொன்றற்கும் ஒவ்வொரு வரிவடிவங்கொளப் புகின் எழுத்துக்கள் பல்கும். தமிழ் எழுத்துக்கள் 247 என்பது போய்ப் பல்லாயிரக் கணக்காகப் பெருகிவிடும். இயந்திரத்தால் அனைத்தையும் இயக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டு மனிதனுக்கு, இளைப்பாறவும் நேரமில்லாது வருந்தும் இக்கால மனிதனுக்கு அது பெருந்துன்பத்தையே அளிக்கும். வரிவடிவம் எவ்வளவுக் கெவ்வளவு குறைகின்றதோ அவ்வளவுக் கவ்வளவு பயிலும் துன்பமும் பயன்படுத்தும் துன்பமும் குறைகின்றன. இதை உன்னியே நம்முன்னோர் திரிபுற்ற ஒவ்வோர் ஒலிக்கும் வரிவடிவங் கொள்ளார் ஆயினர்.

ஆங்கிலத்தில் 26 எழுத்துக்களே உள்ளன. ஆனால் ஒலி வடிவங்களோ மிகப்பல உள்ளன. ஆங்கிலத்தில் உயிர் எழுத்துக்கள் ஐந்து; (a, e, i, o, u) உள்ளன. ஆனால் அவைகள்

ஏறக்குறைய முப்பது உயிரொலிகளைக் குறித்து நிற்கின்றன என அறிஞர் கூறுகின்றனர். எனவே ஒலி வடிவம் ஒவ்வொன்றற்கும் வரிவடிவங் கண்டு போதல் மிகையாம்.

எழுத்துக்கள் பிறக்கும் முறையினைக் கூறிய தொல்காப்பியனார் தாம் கூறியவாறன்றி எழுத்துக்கள் சிற்சில இடங்களில் திரிந்து ஒலிக்கும் நிலையுமுண்டு என உணர்ந்தனர். ஆதலின்,

"தத்தம் திரிபே சிறிய என்ப." (தொல். எழுத்.)

என இலக்கணம் வகுத்தனர். பின்னர் எழுந்த நன்னூலும் இதனைத் தெளிவுபட வலியுறுத்திச் செல்லுகின்றது. மொழியிடைப் படும்போது எழுத்துக்கள் சிறிது எடுத்து ஒலிக்கப்படுதலும், படுத்தும் நலிந்தும் ஒலிக்கப்படுதலும் உண்டு எனக் கூறிப் போந்தனர் நன்னுலார்.

"எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமிற் சிறிதுள வாகும்." (நன்னூல். 88)

என நன்னூல் நவிலல் காண்க.

எனவே நான்குவகை எழுத்துக்கள் தமிழில் இல்லையாதலால் இது தமிழ்ச் சொல்லன்று எனக் கூறுதல் தவறு என்பதும், அவ்வெழுத்தொலிகள் தமிழில் உண்டு என்பதும், ஆனால் வெவ்வேறு வரிவடிவங்கள் கோடல் தேவையற்றது என்பதனால் தமிழறிஞர் கொள்ளாராயினர் என்பதும், சொற்களை ஆயப்புகுவார் வெறும் ஒலி நிலைநோக்கி இது இம்மொழிச்சொல், அது அம்மொழிச்சொல் என முடிவுகூறல் சிறந்ததன்று என்பதும், வேர்ச் சொற் கொண்டு முடிவுகூறலே சிறந்தது என்பதும் அறிஞர் நோக்கற் பாலனவாகும்.

திருவாட்டி இராதாபாய் சுப்பராயன் மறைவு

இந்திய மைய அரசின் போக்குவரத்து, அஞ்சற்றுறைகட்கு அமைச்சர் டாக்டர் திரு பி. சுப்பராயன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் திருவாட்டி இராதாபாய் சுப்பராயன் அவர்கள் கடந்த 2—6—60 இரவு புதுதில்லி மருத்துவ விடுதியில் தமது 69ஆவது அகவையில் காலமானர்கள். அம்மையாருக்கு மூன்று ஆண்மக்களும் ஒரு மகளும் உளர்.

இச் செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறோம். அம்மையாரவர்கள் உயர்குடியிற் பிறந்தவர்கள். பொதுநலம் நாடி உழைக்கும் பெற்றியர். இத்தகையாரை இழந்து வருந்தும் டாக்டர் சுப்பராயன் அவர்கட்கும், அவர்தம் மக்களுக்கும் உற்றார் உறவினர் நண்பர் ஆகிய அனைவருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். அம்மையார் ஆவி இறையடியில் இன்புறுவதாக.

மேற்கு சர்மனி பான் பல்கலைக் கழகத்திற்குத்

தமிழ் எழுத்தொலி ஆராய்ச்சியாளர்



டாக்டர், **C. R.** சங்கரன்

தமிழ்ப் பேரறிஞர், எழுத்தொலி ஆராய்ச்சியாளர், **டாக்டர் C. R. சங்கரன்** என்பவரை, மேற்கு சர்மனி நாட்டின் **பான்** (Bonn) பல்கலைக் கழகத்தில் சென்றுபோதிக்கும் பேராசிரியராக (Visiting Professor) நியமித்திருப்பது மகிழ்தற்கு உரியது.

டாக்டர் சங்கரன், சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்; பூனா தெக்காணக் கல்லூரி எழுத்தொலி ஆராய்ச்சி நிலையத்தில் பணியாற்றியவர். இவர் தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தை அடிப்படையாகக்கொண்டு, 'Phonemics of old Tamil' என்ற அரிய ஆராய்ச்சி நூலை எழுதினார். தொல்காப்பியர் விஞ்ஞான முறையின்படி கையாண்ட சொற்களின், எழுத்தொலிகளின் ஆக்க அமைப்பு முறை, பாணினி எழுதிய அட்டாத்தியாயி என்னும் வடமொழி இலக்கண நூலிலும் காணப்படுவது அன்று என்றும், இக்கால எழுத்தொலி ஆராய்ச்சியாளர் கண்ட புதிய கொள்கைகள் பல, இப் பழந்தமிழ் இலக்கணத்தில் காணப்படுவது பெரும் வியப்பைத் தருகின்றது என்றும் முதல் முதல் ஆராய்ச்சி உலகிற்கு இந்நூலால் அறிவித்தவர் இப் பேராசிரியரே ஆவார்.

எழுத்தொலி ஆராய்ச்சியுடன் இசை ஆராய்ச்சியிலும் வல்லுநர், இப் பேராசிரியர். தமிழ்நாட்டு இசைமுறை வடநாட்டு

இசைமுறை என்னும் இரு இசைமுறைகளையும் நன்கு பயின்று தேர்ந்தவர். இருக்கு வேத இசையிற் பயிலும் சுரங்களைப் படம் பிடித்து இக்காலத்தே விஞ்ஞான முறைப்படி ஆராயும் கருவிகளைக்கொண்டு ஆராய்ந்து தெளிவுபெற வெளியிட்டார். பேச்சொலியிற் காணும் நுண்ணிய சார்பு ஒலிகளின் நிலையை இசையிற் பயிலும் நுண் சுருதிகளைக்கொண்டே விளக்கும் ஆற்றல் வாய்ந்தவர் இவர்.

தொல்காப்பியர் விளக்கிய ஆய்த எழுத்தொலியை அடிப்படையாய்க்கொண்டு ஆராய்ந்து எழுத்தொலிகளின் ஆக்கத்திற்கு ஆய்த ஒலியே அடிப்படையாவது எனக் கண்டார். இதற்கு ஆய்த நிலை (Aytham phenomenon) எனப் பெயரிட்டு, Alpha phonoid (ஆல்பா பெர்னுயிட்) என்னும் புதுக்கொள்கையை இவர் நிறுவினார். இவர் ஆராய்ச்சிகள் எழுத்தொலி இயலைக் கணக்குமுறைப்படிக்கும், விஞ்ஞானமுறைப்படிக்கும் நிறுவ எழுந்தவை. இவை ஐரோப்பிய நாட்டு அறிஞர் பலர் கருத்தைக் கவர்ந்தன. அவர்கள் இவ்வாராய்ச்சியைப் பாராட்டினர். இவர் கண்ட உண்மைகளையும், தொல்காப்பியர் காட்டிய முறையையும் பான் பல்கலைக் கழக மாணவர் முன் விளக்கவும், போதிக்கவும், டாக்டர் சங்கரன் அவர்களை இப்போது நியமித்துள்ளனர்.

சென்றுபோதிக்கும், ரிச்சர்ட்-மெர்டன் பேராசிரியராக (Richard - Merton Visiting Professor) ஒன்பது மாதங்கள் 1960-மே மாதம் முதல் 1961 ஜனவரி மாதம் முடிய இப் பல்கலைக் கழகத்தில் இவர் பணியாற்றுவார்.

பாண்டியன் பனுவல் பேரவையின்கண், அன்று, தொல்காப்பியர் மயங்காமரபின் எழுத்துமுறை காட்டிப் பல்புகழ் நிறுவிய படிமையோன் எனத் திகழ்ந்தார். அவ்வாறே, இன்று **உயர்திரு டாக்டர் சங்கரன்** அவர்களும் பான் பல்கலைப் பேரவையிலும் பேரறிஞர்கள்முன் மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டிப் பல்புகழ் நிறுவச் சென்றுள்ளார். இப் பேராசிரியர் நலம் பல பெற்றுப் புகழ் பல நிறுவி, வெற்றியுடன் மீளுமாறு வாழ்த்துகிறோம், இறைவனை வேண்டுகிறோம்.

எழுத்தொலிகளைப் படம் பிடித்து, அவ்வொலிப்படங்களை விஞ்ஞானக் கருவிகள் கொண்டு இப் பேராசிரியர் ஆராய்வதைத் தலைப்பில் காணும் படம் காட்டுகின்றது.

செந்திலாண்டவன்

செய்தருளுஞ் சிறப்புத் திருவருள்

[சித்தாந்த பண்டிதர், ப. இராமநாத பிள்ளை.]

(செல்வி சிலம்பு ௩௪, பரல் ௧, ௪௪௨ ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருமணம்

அடிகளாருக்கு அகவை முப்பத்திரண்டு நிகழுங்கால் தம் வழியைச் சார்ந்த 'தாயாரம்மாள்' என்னும் நற்பண்பெல்லாம் ஒருங்கமைந்த நங்கையினைத் திருவருளால் திருமணம் புரிந்து கொண்டனர். அந்நங்கையும் சீர் சிறப்புடன் மனையறம் பேணி வந்தனர். முருகனருளால் அவ்வம்மையார்பால் ஆண்மகவிரண்டும் பெண்மகவொன்றும் பிறந்தன. ஏறத்தாழ அடிகளாரின் அகவை 44 அல்லது 45 ...க்கும்போது இவ்வம்மையார் இறையடி எய்தினர். அதன்பின் இவ்வம்மையின் அண்ணன் மகளாகிய 'முத்துலட்சுமி' என்னும் நங்கையினைத் திருமணம் புரிந்து கொண்டனர். இவ்வம்மையார்பால் ஆண்மகவொன்றும் பெண்மகவொன்றும் பிறந்தன. பிள்ளைகளனைவரும் வேண்டுஞ் சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். அடிகளாரும் கற்பிற்சிறந்த மனைவியார் முத்துலட்சுமியம்மையாரும் மக்களும் குடும்பமாக வாழ்ந்து வருகின்றனர்.

கடல்கடந்த வெளிநாடும் போய்வரல்

கண்காணும் முருகன் முதலடியாராகத் திகழும் திருமுருக. கிருபானந்தவாரியாரவர்கள் பெருந்துணையால் மலேயாவுக்கும், கொழும்பு சுந்தரம் கம்பெனி உரிமையாளர் திரு. வை. கணபதியா பிள்ளையவர்களின் நற்றுணையால் கொழும்புக்கும் அடிகளார் சென்று இசையரங்கு நிகழ்த்திப் பேரும், புகழும், பொருளும் பெருகப் பெற்று மீண்டனர். அன்பர் வேண்டுகோளின்மேல் பெங்களூர் சென்று இசையரங்கு நிகழ்த்தினர்.

போட்டிப் பரிசு

தமிழிசை வளர்த்த பெருவள்ளல் ராசா சர். அண்ணாமலைச் செட்டியார் நிறுவிப் புகழொடு திகழும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'தமிழிசைப்பாவின் போட்டி'யொன்று நிகழ்த்தினர். அதன்கண் கலந்து கொள்ளுமாறு அன்பர்கள் பலர் அடிகளாரைத் தூண்டினர். அடிகளார்க்குப் பிறர்பெறும் பரிசுக்குத் தாம் போட்டியாக நிற்பது தகாதென்னும் நினைவுண்டாயிற்று. அதனால் அடிகளார் அப்பரிசிற் கலந்து கொள்ளவில்லை. அங்ஙனமிருந்தும் அடிகளார்பால் மெய்யன்புபூண்ட அன்பரொருவர்

அடிகளார் அருளாலாக்கிய கீர்த்தனங்கள் பலவற்றைத் தாமாக எழுதி, அண்ணமலைக் கழகப் போட்டிக்கு அனுப்பி வைத்தனர். இஃது அடிகளாருக்குத் தெரியாது. போட்டியில் அடிகளார் பாக்களே முதன்மையானவை யென்று முடிவு செய்தனர். பரிசினை வந்துபெற்றுக் கொள்ளுமாறு கடிதம் வந்தது. கடிதங் கண்ட அடிகளார் வேறு செய்வதற்கில்லாமையால் அண்ணமலை நகர் சென்று பரிசு பெற்று மீண்டனர்.

திருவிழாக் காட்சி உறுதி

அடிகளார் செந்திலாண்டவனை அடுத்தநாள்முதல் ஏறத்தாழ நாற்பதாண்டுகளுக்குமேல் ஆவணித் திங்களிலும், மாசித் திங்களிலும் நடக்குந் திருவிழாக் காலங்களில் ஆறுந்திருநாள் இரவு திருச்செந்தூருக்கு வந்து ஏழு எட்டுத் திருவிழாக்களை இன்றியமையாது கண்டு வழிபட்டு முருகன் அருள்பெற்றுப் பெருந் தொண்டாற்றி வருகின்றனர். அந்நாட்களில் எத்துணைப் பெரும் பொருள் வருவதாகவிருந்தாலும் அடிகளார் இசை யரங்குக்கு இணங்குவதில்லை. எதிர்பாராத முட்டுக்கள் நிகழுமேல் அவற்றையெல்லாம் முருகப்பெருமான் தோன்றுத்துணை யாகவிருந்து நீக்கி ஆட்கொண்டருளுகின்றனன். அங்ஙனம் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பல. இரண்டொன்று இங்குக் காண்க. அடிகளார் எவரிடமும் பொருள் கேட்டுப் பெறுவதில்லையென்று நோன்பு கொண்டிருந்த காலத்து அம்பாசமுத்திரமிருந்து 'ஏழாந் திருநாளுக்கு' வந்து சேர்தல் வேண்டும்; புகைவண்டிக்கும் உந்து வண்டிக்குமாக வேண்டிய கட்டணத்துக்கு ஒரு ரூபா குறையவிருந்தது. ஆண்டவன் புகலிடுவான் என்னும் முழு நம்பிக்கையுடன் அடிகளார் முருக நாட்டங்கொண்டு வருவாராயினர். அப்பொழுது பெருஞ்சாலை நடுவழியில் ஒரு ரூபா நோட்டுத் தென்பட்டது. அடிகளார் அதனை முருகனருள் என்றேகொண்டு வந்து சேர்ந்தனர். பின்னொருகால் வேண்டும் பொருளுடன் திருநெல்வேலியில் நாலைந்து நாட்களுக்கு முன்பாகவே வந்திருந்து புகைவண்டித் துண்டெடுக்கப் பெருமுயற்சி பண்ணியும் முடியாதாயிற்று. ஆறுந்திருநாளின் இரவு அடிகளார் திருச்செந்தூருக்குப் போகாவிடின் அடிகளார் மேற்கொண்ட நோன்பு முட்டுற்றதாகும். இறுதி நேரம் வரையும் துண்டு கிட்டவில்லை. பெருங்கவலையுடன் அடிகளாரிருந்தனர். அன்பர் ஒருவர் அம்பாசமுத்திரமிருந்து திருச்செந்தூருக்கு இரண்டாவது வகுப்பு வண்டியில் வந்து கொண்டிருந்தனர். ஒரு காரணமுமில்லாமல் அவர் திருநெல்வேலியுடன் நின்றுவிடலானர். இதனையுணர்ந்த அடிகளாரின் அன்பர் அத்துண்டினை விலைக்கு வாங்கி அடிகள்பால் நல்கினர். அடிகளும் அருள் நினைந்துருகிச் செந்தூர் சென்று வழிபட்டு இன்புற்றனர்.

மலேயாவிலிருந்து வருதல்

அண்மையில் மலேயா சென்ற அடிகள் ஆறுதிங்களுக்கு அங்குத் தங்கும் உரிமைச் சீட்டுடன் சென்றிருந்தனர். நான்கு திங்கள் கழிந்ததும், ஏழாந் திருநாள் வந்தது வருவாயைக் கருதாது அடிகளார் புறப்படவுன்னினர். ஆனல் கப்பல் புறப் படுவதற்கெனக் குறிக்கப்பட்டுள்ள நாள் விழாவுக்கு வந்துசேரப் போதுமானதாகவில்லை. அடிகளாரும் மிகுதியுங் கவலை கொண் டனர். எதிர்பாராத வகையாக 'ஏகூலர்' என்னுங் கப்பல் புறப்படுவதாக விருந்தது அதில் ஏறினர். ஏறியுமென்? அது வழக்கம்போல் கிள்ளான் சென்று நாகப்பட்டினத் துறைமுகம் வந்திருந்தால் விழாவுக்குச் செல்ல முடியாதாகவே யிருந்திருக் கும். திருமுருகன் திருவருளால் வேறெங்குஞ் செல்லாது சென்னைத் துறைமுகமே வந்து சேர்ந்தது. அதனல் அடிகளார் எவ்வகை இடையூறுமின்றிக் குறித்த நாளில் செந்தூர் சேர முடிந்தது. அடிகளார் முருகன் திருவருளையுன்னிப் பெரு மகிழ்வுகொண்டனர். வழக்கம்போல் விழாக்கண்டு வணங்கிப் பேரின்புற்றனர். தெய்வத் திருவருளை நம்பினர் அத்திருவரு ளால் எல்லா வகையாலும் நடத்தப்பட்டின்புறுவர் என்பது இதனல் நன்கு விளங்குகின்றதல்லவா?

அடிகளார் நூல்

அடிகளார் பாடியுள்ள திருவருட்டமிழ்க் கீர்த்தனங்கள் பலவும் காலத்தொடு பொருந்த வெளிப்போந்த சிறப்பினவாகும். அவையனைத்தும் அச்சாகிச் சுவடி நிலைபெற்று வெளிவருவது மிகவும் இன்றியமையாததாகும். அடிகளார் அதுகுறித்து ஏதும் முயலுவதாகவில்லை. அன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் முன்னின்று வேண்டுவன செய்வது பெரும் சிவபுண்ணியமாகும். அதுபோல் அடிகளாரின் முழுவரலாற்றையும் விரிவாக வெளி வரச் செய்வதும் நம்மனோர் கடனேயாம்.

1928 ஆம் ஆண்டில் ஏறத்தாழ நாற்பது கீர்த்தனங்களடங் கிய ஒரு சுவடி "செந்திலாண்டவன் கீர்த்தனை" என்னும் பெய ருடன் நெல்லை மாவட்டத்து அம்பாசமுத்திரத்தினின்றும் வெளிப் போந்துளது. இஃது இரண்டாம் பதிப்பாகும்; படிகள் 2000. வெளியிட்டவன்பர் அம்பாசமுத்திரம் 'பெருமாளாச் சாரி அவர்கள் குமாரர் பெ. சங்கரநாராயணன்' அவர்களாவர். இதற்குச் சாற்றுக்கவி நல்கிய பெரியார் திருநெல்வேலி தெற்குப் புதுத்தெரு 'நாராயணக் கவிராசா' அவர்களாவர். வடக்குக் காருகுறிச்சி அடுக்குமொழி பி. ஆவுடையப்பச் செட்டியாரவர் கள் நூலின் பெருமையினையும் அடிகளாரின் மெய்வரலாற்

றினையும் 17 கண்ணிகள் கொண்ட நொண்டிச்சிந்தாக விளக்க முறப் பாடியுள்ளார்.

அடிகளார் 'தமிழகத் தலைநகராம்' சென்னை மாநகருக்கு வரும்போதெல்லாம் நுங்கம்பாக்கத்து வாழும் யாழ்ப்பாணம் திருவாளர் தி. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் மகனார் டாக்டர் இராசராசன் அவர்கள் வளமனைக்கண் தங்குவர். இப்பொழுதும் அங்குத்தான் தங்கியுள்ளனர். இவ்விராசராசனார் திருமணத் தின்போது அடிகளார் இசையரங்கு நிகழ்த்தி யாவரையும் களிப் புறச் செய்தனர் என்பதும், அந்நாட்டொட்டு நெருங்கிய உணர்ச்சியொத்த உறவினராய்த் திகழ்கின்றன ரென்பதும் உணரத்தக்கது.

அடிகளாரின் பாடல்கள் பத்திச்சுவைமிக்கது. 'தியாக ராசசுவாமிகளைப்' போன்று அவ்வப்போது கசிந்துருகிப் பாடும் கனிவும் பொருந்தியது. அடிகளார் ஒரு சிறந்த 'சுரவுணர்வின' ராவர். சுரவுணர்வு — சுரஞானம். அங்ஙனமிருப்பினும் வெறுங் 'குரல்' நிரப்பிப் பாடுவதில் ஈடுபடுவதில்லை. அக்குரல் களைக்கொண்டு இசைப் பாட்டாகிய சாகித்தியம் அமைத்து அவையோர் விழையுமாறும் இன்புறுமாறும் பாடுவதில் மிக்க திறலினராவர். அதுவே அவர்தம் பழக்கமுமாகும். ஒவ்வொரு பாடல்களின் இறுதியிலும் 'ப. த. நி. ச.' என்று எல்லாரும் பாடுவதற்கு மாறாக அடிகளார் 'பரமசாம்பவனுமே' என்று பாடுவர். இங்ஙனம் பாடுவது மிக்க இசைத்திறம் வாய்ந்தார்க்கே இயல்வதாகும்.

இசையன்பர்களும் இளைஞர்களும் அடிகளாரின் வரிப் பாட்டுக்களை விரும்பிக் கேட்டு அவர்களை ஊக்குவித்தல் வேண் டும். இது அவர்தம் தலைக்கடமையுமாகும். 'சென்னை இசைக் கழகம்' ஆண்டுதோறும் நிகழ்த்தும் விழாக்களில் அடிகளாரைப் பாடச் செய்வதில்லை. 'தமிழிசைச் சங்கமும் அடிகளாரைச் சிறப்புறச் செய்தல் வேண்டும். செந்திலாண்டவன் திருவரு ளால் இசைப்பாட்டுக்கள் அவ்வப்போது இயற்றி அரங்கங்களில் பாடி அணி செய்யும் அடிகளார் இக்காலத்துத் திகழும் 'தியாக ராயர்' எனவே கூறலாம்.

அடிகளார் முருகப்பெருமான் திருவருளால் பல்லாண்டு வாழ்ந்து குடும்ப மாண்பு, செல்வ வளம், திருவடித் தொண்டு, நல்வாழ்வு எல்லாம் பெருகி வாழச் செந்திலாண்டவன் சேவடியை வணங்குதும்.

வாழ்க மாரியப்ப அடிகள்.

சின்மய தேசிகர்

[திரு. சூ. அ. இராமசாமிப் புலவர்]

சின்னான் சாமிகள்

சின்னான் சுவாமிகள் எனவும் சின்மய தேசிகர் எனவும் மக்களாற் கூறப்பெற்ற இப் பெரியார் தோன்றிய இடம் காலம் குலம் முதலியன அறியப் பெறவில்லை. ஆடையும் அற்றவராய்ப் பிறந்த மேனியாய் விளங்கிய இவர் தஞ்சை மாவட்டத்தில் பல சிற்றூர்களினுஞ் சுற்றிக்கொண்டிருந்தார். ஏறக்குறைய ஐம்ப தாண்டுகட்கு முன் இவர் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது.

அறைக்குள் அகப்படாமை

இவர் அடியக்கமங்கலம் என்னும் ஊரில் சுற்றிக்கொண்டிருந்த காலத்தில் ஒருவனுடைய எலுமிச்சைத்தோட்டத்திற்குள் நுழைந்து காவலனுக்குத் தெரியாது எலுமிச்சம் பழங்களைப் பறித்துக்கொண்டு வெளியே வரத்தொடங்கினர். காவற்காரன் இவரைக் கண்டான். தோட்டத்துக்குள் இருந்த கட்டிடம் ஒன்றுக்குள் இவரைப் பிடித்து அடைத்துப் பூட்டினான். விரைந்து சென்று தன் தோட்டத் தலைவனாகிய உரிமையாள னிடஞ் செய்தியைக் கூறினான். இருவரும் விரைந்து தோட்டத் திற்குள் வந்தனர். அடிகளார் கட்டிடத்திற்கு வெளியே உட்கார்ந்து கொண்டிருந்தனர். இருவரும் அடிகளாரது பெருமையை உணர்ந்து வணங்கினர். காவல்காரன் தான் செய்த குற்றத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதுமுதல் அத் தோட்டம் மிகுந்த பலனைக் கொடுக்கத் தொடங்கியது.

நாகூரில் நடந்தது

அடிகளார் நாகூரில் ஐந்நான்காண்டுகள் அமர்ந்திருந்தனர். இவர் உடை கோவணமற்றவராய் உலாவியது அங்கிருந்த முகமதியர்கட்கு வெறுப்பை விளைவித்தது. அடிகளாருடைய கண்கள் இரண்டினும் தில்லம்பாலைக் கறந்து ஊற்றி நிறைத்து ஓர் அறையிற் போட்டுப் பூட்டினர். ஆனால் அடிகளார் வேறொரு தெருவிலே காணப்பட்டார்.

தண்ணீரில் அமிழாமை

பின்பொருநாள் இவருடைய கைகால்களை இறுகக்கட்டி ஆற்றுப் பெருக்கில் தூக்கி யெறிந்தனர். சிறிதுநேரத்தில் கட்டவிழ்ந்துவிடக் கரையேறிக் காட்சி நல்கினர்.

கண்டயோகம்

பிறகு இவர் திருவாரூரை அடைந்தார். இவருடைய பெருமையை நன்குணர்ந்த மருத்துவன் ஒருவன் இவரைப் போற்றிப் பாதுகாத்துத் தன்னுடைய இல்லத்திலே வைத்திருந் தான். அவன் ஒவ்வொருநாள் காலையிலும் தான் செய்த மருந்துகளை இவருடைய திருவடிகளில் வைத்து எடுத்துக் கொண்டுபோய் நோயாளிகட்குக் கொடுத்தான். இவ்வாறு செய்யத்தொடங்கிய நாள்முதல் அவனுடைய மருந்து நோய் களைத் தவருமல் நீக்கியது. அதனல் அம் மருத்துவனுக்கு வருவாய் மிகுதியாகி அவன் சிறப்போடு வாழலானான்.

மறையவனுக்கு மக்கட்பேறு

பிறகு அடிகளார் நாகைக்கு அண்மையில் உள்ள இஞ்சிக் கொல்லை யென்னும் ஊரையடைந்து ஈரைந்தாண்டுகள் இனிதமர்ந் திருந்தார். அவ்வூரிலே அப்பொழுது மறையவன் ஒருவன் பட்டாமணியக்காரனுக வேலை பார்த்துக்கொண்டிருந்தனன். அம் மறையவனுக்கு அகவை ஐம்பதாகியும் மக்கட்பேறு உண்டாகவில்லை. பலவகை நோன்புகளை அவன் மேற்கொண்டும் பயனில்லாது போயிற்று. ஞானியைப் போற்றின் நலமெலாம் உண்டாம் என்பதை நன்குணர்ந்த அவன் இப் பெரியாரைப் போற்றித் தனதில்லில் வைத்து உணவாதி தந்து வழிபட்டான். இவருடைய மிச்சில் உணவை உண்ட காரணத்தினல் அவனுக்கு மகப்பேறு உண்டாயிற்று. இப் பெரியார் உணவைப் பிறர் வாயிலூட்டினுல் உண்பதேயன்றித் தாம் தமது கையினுல் எடுத்து உண்பதில்லை. இவரைப் போற்றிப் பாதுகாத்து வைத் திருந்த மறையவன் இவருக்கு உணவு ஊட்டியபிறகே தான் உண்பது வழக்கம். ஒருநாள் மறையவனுடைய மனைவி அடிக ளாருக்கு உணவூட்டுதற்கு வந்தனள். உணவில் நெய்க்குப் பதில் நல்லெண்ணெயைக் கலந்து கொண்டுவந்தனள். அவள் தொலைவில் வரும்போதே இவர் நல்லெண்ணெய் கெட்ட நாற்றம் வீசுகிறதென்று கிளத்தினர். இத்னையறிந்த அந்தணன் வேறு உணவில் நெய்யூற்றிக் கலந்து கொண்டுவந்து இவருக்கூட்டினுன்.

மண்ணே மருந்து

பின்னர் அடிகளார் புதுக்குடி என்னும் ஊரில் ஆறு ஆண்டு கள் தங்கியிருந்தனர். அவ்வூரில் ஒருவன் முற்பிறப்பின் தீவினை யினல் இரைப்பு நோய் எய்தி வருந்தினுன். அதைப் போக்கும் பொருட்டுப் பல மருத்துவர்களிடத்தில் மருந்து சாப்பிட்டுப் பார்த்தான். நோய் மிகுதிப்பட்டதேயன்றிச் சிறிதுங் குறைய

வில்லை. அவன் அந்நோயால் அளவுகடந்த அல்லல் அடைவதை அறிந்த அடிகளார் அந்நோயை அகற்றத் திருவுளத்தில் எண்ணினர். சிறிது மண்ணையள்ளிக் கொடுத்து உண்ணச் செய்தார். அக்கணமே அந்நோய் அகன்று அவன் நலமுற்றான்.

விலைமகள் மடமை

பின் அடிகளார் குடவாசல் என்னும் ஊரில் ஐந்தாண்டுகள் தங்கியிருந்தனர். அவ்வூரில் விலைமகள் ஒருத்தி அடிகளார்க்கு உணவு முதலியன அளித்துப் பாதுகாத்தாள். அவ்வூரிலுள்ளார் சிலர் அடிகளாரின் தன்மையை ஆராய்ந்து பார்க்க எண்ணினர். அவ் விலைமகளையே ஏவினர். அறியாமையிற் கட்டுணலுற்ற அவ் வாயிழை பெரியார்க்குப் பிழைசெய்தல் பீழையைத் தருமென்று ஏழை மதியால் அறியாது போயினள். ஒருநாள் அடிகளாரை அவள் இறுகக் கட்டித் தழுவினள். உடனே இவர் கூச்சலிட்டுக் கொண்டு வெளியே ஓடிப்போயினர். அற்றை நாள்முதல் அவ் விலைமகட்குப் பொருள் வரவின்மை, நோய், மனக்கவலை முதலாம் பல தொல்லைகள் உண்டாயின. இது தனது மடமையால் எய்தியதென்பதை நன்கறிந்த அவள் இப் பெரியார் இருக்கு மிடத்தையடைந்து, "பெரியீர்! அறிவின்மையால் அடியாள் செய்த தவற்றினைப் பொறுத்துப் பண்டேபோல் நான் நலமடைய நல்லருள் நல்கியருள வேண்டுமெனப் பலகால் வேண்டிக்கொண் டனள். இப் பெரியாரும் அவ் விலங்கிழையின் பிழையைப் பொறுத்து மன்னித்தருளினர். அம் மடமாது பின்னர் முன் போல் நலமுற்றிருந்தனள்.

தாசில்தாரும் ஏவலனும்

பிறகு அடிகளார் நாச்சியார் கோவிலில் இரண்டு ஆண்டு களும் குடந்தையில் ஈரிரண்டாண்டுகளும் இருந்தனர். குடந் தையில் வள்ளுவ மாதொருத்தி இப் பெரியாரது பெருமையை உணர்ந்து உணவு முதலியன கொடுத்துப் போற்றினள். அடிகளார் ஒருநாள் காவிரியாற்றின் பாலத்தின்மீது உட்கார்ந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அவ்வழியே தாசில்தார் ஒருவரும் அவருடைய ஏவலன் ஒருவனும் வந்தனர். அவர்கள் தம் வழியே செல்லாது இப் பெரியாரிடம் வம்பு செய்தனர். பாலத்தைவிட்டுக் கீழே இறங்குமாறு பகர்ந்தனர். அவர்களது செயல் அடிகளாருக்குச் சினத்தை அளித்தது. "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்தலரிது" என்பதை அவர்களிருவரும் அறியாதுபோயினர் "இவனைப் பாடையிற் பார்த் தால் அன்றிப் பாலத்தைவிட்டுக் கீழே இறங்கேன்" என்றனர். அன்றே அத் தாசில்தார் இறந்து பாடையில் ஏறினர்.

இவருடைய இயற்கை

பிறகு இவர் ஆரியச்சேரி என்னுமிடத்தில் ஆறு ஆண்டுகள் தங்கியிருந்தார். இவருடைய பழக்க வழக்கங்கள் புதுமை யானவை. ஒருவேளையில் மூன்று சேர் மிளகாயை உண்ணுவார். இவர் தாமே நீராடார். உடலில் அழுக்குப் படிந்திருக்கிறதே என்று யாரேனும் நீராட்டினால் நீராட்டும் வரை பேசாதிருந்து பிறகு தலையைத் தரையின்மீது மோதிக்கொள்வார். இடை விடாமல் நீராட்டினால் மோதாமல் இருப்பார், நீராட்டுவோர் களைத்துப் போனால் மகிழ்ச்சியடைவார்.

பத்தன் மகப்பேறு

கண்டரமாணிக்கத்தில் இருந்த ஒரு பத்தன் மகப்பேறில்லாக் குறையால் வருந்தி இவரையடைந்து பணிந்து போற்றினன். தன்னுடைய குறையை முறையிட்டுக்கொண்டான். "இரண்டோர் ஆண்டுகளில் உனக்குக் குழந்தை பிறக்கும்" என்று இவர் திருவாய்மலர்ந்தருளினர். அவ்வாறே அவனுக்கு மகப்பேறு உண்டாகியது.

ஒருவன் ஞானம் பெறுதல்

பேரவாவும் தீராக் கவலையும் ஒழியாத் துன்பமும் அமையப் பெற்ற ஒருவன் வந்து அடிகளாரை வணங்கினன். அடிகளார் ஒரு காலை அவனுடைய தலையின்மீது சூட்டினர். கால்நாழிகை கழிந்தபின்னர் எழச் செய்தனர். அந் நல்வினையாளன் பிறகு இல்லறவாழ்வை மேற்கொள்ள முயன்றும் முடியவில்லை. காசி முதலிய சிவப்பதிகளுக்குப் பயணஞ் சென்று மெய்யறிவினை யடைந்து சிறந்து விளங்கினன்.

இறுதி

பிறகு சன்ன நல்லூரில் இருந்த வைத்தியலிங்கம் பிள்ளை என்பவர் அடிகளாரைத் தம்முடைய ஊருக்கு அழைத்துக் கொண்டு சென்றார். அங்கு ஆறு திங்கள் இருந்த பிறகு கலியுகம் ௫௦௧௦ இல் சௌமிய ஆண்டு ஆடித் திங்கள் நக ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆயிலிய நாளில் வீடுபேற்றை அடைந் தார்.

வணக்க நூல்கள்

இப் பெரியார் மீது சிலர் தனிப் பாடல்களையும் சிலர் வணக்க நூல்களையும் இயற்றினர். சேலம் சி. மாணிக்க

முதலியார் என்பவர், 'சின்மய தேசிகர்மாலை' என்னும் நூல் ஒன்றைப் பாடினார்.

" மாற்றுயர்ந்த பசும்பொனிடை மணிகுயிற்றுங்
　　கோயில்வாய் மன்ன உன்னை
ஏற்றுதலின் நடைவாவல் என்மனத்திற்
　　பேராசை இருத்தி வைத்தேன்
தாற்றுயர்ந்த பூகந்தெங் கினியபல
　　மாஞ்சோலைத் தருக்கள் வான்றோய்
சாற்றுயர்ந்த வளஞ்சாலும் பதிசன்னை
　　அமரர்சின்னஞ் சாமித் தேவே."

என்பது அந்நூலில் ஒரு பாட்டு.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

மதுரை ஆதினம்

70, தெற்கு ஆவணி மூலவீ.
மதுரை 18-4-'60

உயர்திரு வ. சுப்பையா பிள்ளை அவர்கள்,
　　தபால் பெட்டி 85.
　　　　சென்னை-1.

எல்லாம்வல்ல எம்பெருமானது இன்னருளால் எல்லா நலங்களும் எய்துக.

தங்களுடைய 16உ கடிதம் கிடைத்தது. மகிழ்ந்தோம். நெல்லை, திரு. இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளை அவர்களும், திரு. நெல்லையப்ப பிள்ளை அவர்களும், (17—4—60) காலை இவிடம் வந்து சேர்ந்தார்கள். முற்பகலினும், இரவினும் மறைத்திரு. மறைமலையடிகளாரது சொற்பொழிவுகளையும், செரியன் தம்பதிகளின் பேச்சுக்களையும், நாடா ஒலிப்பதிவு செய்துகொண்டோம்.

பிற்பகலினும், இரவு 9 மணிக்கு மேலும், இராமநாதபுரம் ஸ்ரீ காசிநாததுரைக்கும், வேறு சில அன்பர்களுக்கும் பலருடைய தொனிகளில் பேசி மகிழ்வித்தனர்.

(ஒப்பம்) ஞானசம்பந்த தேசிகர்.
19—4—60.

---

* மதுரைப் பழம்பதி மாண்பு

(1) " குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே."

(2) " தோலுந் துகிலுங் குழையுஞ் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியுஞ்
சூலமுந் தொக்க வளையு முடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ."

திருஞானசம்பந்தப் பெருமானார் திருமுறைக்கண் திருவருளருட்சத்தியுடன் நின்றிலங்கித் தமிழ்வளர்த்த திரு. மதுரையம் பதியின்கண், ஆலவாய், நான்மாடக்கூடல், மதுரை, கடம்பவனம் என்று புகழுறப் போற்றிய பொற்றலத்துப் பொலிவுடன் விளங்கும் அம்மை அங்கயற்கண்ணி யென்ற தாய் மீனாட்சியம்மையையும், திருவிளையாடல்கள் சிறப்புறப் புரிந்து கருணையளிக்குஞ் சிவமாம்சொக்கலிங்கப் பெருமானையும் சீருறப் பணிந்து, இவண் திருஞானசம்பந்தப் பெருமானார் திருமடத்துப் பேரொளியாய்ப் புகழுடனமர்ந்திருக்கும் அமர்தற்குரியரென அன்றே திருவருளருள்கொண்டு, ஆலவாய் அண்ணலின் அணிபெறுந் திருப்பெயரைப்பெற்றுத் திருஞானசம்பந்த மடத்துத் திருவிருக்கையாயமர்ந்து, எம்பெருஞ் சிவத்தின் தன்மைகளைத் தெளிவுடனாய்ந்து சிவப்பொலிவாயமர்ந்திருக்குந் திருவிருக்கையாந் தவப்பெருந் திரு. சோமசுந்தர தேசிகத் தம்பிரான் திருவிருக்கையாந் தூய்மையே! இவண் குழுமியிருக்கும் எம் உடன்பிறந்தோரனைவருக்கும் என்றுமே எஞ்சிந்தையுறை அம்மை அம்பலவாணனருளளிக்கப் போற்றுதும், காணுலக வாசியெனக் கூறியும், ஆவிஉலகத்துறை ஆவிகளென அழைக்கப்பட்டும் வருங் குழுவிலே பொருவனுப, நம்பூவுலகில் வேதாசலமென்ற எம் தாய் தந்தையரிட்ட பெயரினை, மறைமலையடிகளெனத் தமிழ்த்தாயினருட் குறிப்புடன் மாற்றிய ஒரு சூக்கும உடலுடையவன். வணக்கம்.

" இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு."

---

* மதுரை திருஞான சம்பந்தர் திருமடத்தில் 17-4-60 இல் மறைத் திரு மறைமலையடிகளார் ஆவியுலகத் தொடர்பாளர் திரு. இரா. ந. குற்றாலலிங்கம் பிள்ளைவழி ஆற்றிய சொற்பொழிவு.

என்ற திருவள்ளுவப் பெருமானாருளியமைக் கோரிலக்கண மாய்த் திகழும் திருவொளியாந் திருவிருக்கையே! (பிறப்பு, வீடு என்னும் இரண்டின் இன்பதுன்பங்களை யறிந்து அனுபவித்து இவ்வுலகிற் சிறந்த அறமாம் துறவுநிலை கொளலே சாலச் சிறந்த தென உலகு கூறும்.)

இல்லற இன்பங்களை யாய்ந்து சுவைத்து அவற்றிற்குமோர் எல்லை வகுத்து, அருளொளியாம் அம்மை அம்பலவாணனி னருள் பெற, "மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார், நிலமிசை நீடுவாழ் வார்," என்ற மாதாநுபங்கியின் மணிமொழியைத் தன்னுட் கொண்டொழுகும் வலிமிகு தவத்தோய்! "மரணத்திற்குப் பின் மனிதர் நிலை," யென்னவென யாமாம் மறைமலை யடிகள் நூலொன்றினை மேலை நாட்டினரின் பெருங் குறிப்புகளுடன் யாத்தனம். தாமாந் திருவிருக்கையோ "இறந்தவர்கள் வாழும் நிலையும் பேசும் முறையும்," என்ற பொருட்செறிவுடைக் கருத்தினையும், இறந்தவர்களுடன் பேசும் முறையையும் எளிதிலே யெவர்க்கும் பொருளினிது விளங்க யாத்த பெருமையுடை பேரொளியே! எம் மூலகுறை ஆவிக்கூட்டத்தின் சார்பி நன்றி யுரைக்குதும்.

பாண்டிநாட்டுப் பழம்பெரும் பதியாம், தமிழ் வளர்த்த சங்கம் தோன்றிய பெருமைசால் பழம்பதியாந் திருப்பதியின் பெருமையினைச் சிவநெறிச் சான்றோர், குரவராம் திருமிகு திருவருட்டன்மையைத் திறம்பட வாய்ந்து, தாம் பெற்ற பேறிவ் வையகம்பெற் றின்புறுக என்ற திருவுளங்கொண்டு அருளிய திருப்பதிகங்களுக்குள் மதுரைப் பழம்பதியினையும், சிவபெரு மானையும், அருட்சத்தியையும் எங்ஙனைப் போற்றிப் புகழ்ந்தன ரென்பதைச் சிறு குறிப்புடனுரைக்க விருப்புறுகின்றோம்; இயக்குநர் வழி.

திருஞானசம்பந்தப் பெருமானார் முதல் திருமுறையினருளி யமை காண்க.

"நீல மாமிடற்றால வாயிலான்
பால தாயினர், ஞாலம் ஆள்வரே.
ஞாலம் ஏழுமாம் ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே.
ஆல நீழலார் ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே.
அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல் சிந்தை செய்ம்மினே
ஆட லேற்றினன், கூட லாலவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே." (திருவால. பதி. கூச. க-இ.)

(பொ - ள்.) நீலநிறம் பொருந்திய நஞ்சைச் சிறப்புடைய கழுத்தில் அலங்காரமாக அமைத்துக்கொண்ட திருவாலவாயி லென்னும் பதியி லெழுந்தருளியிருக்கின்ற சொக்கர் பெருமா னுடைய திருவருளைப் பெறுந்தன்மையுடையவர்களே உலகை யாளுஞ் சிறப்புடையவர்க ளாவார்கள்.

2. ஏழுலகப் பெருமையுங் கொண்ட ஆலவாயிலென்னும் பதிக்கிறைவனாகிய சிவபெருமானின் மேன்மைப் பண்புகளைக் காலனும்மை நெருங்கா தழியும்படி பேசுவீர்களாக.

3. கல்லாலின் மரத்தடியிலிருந்து அறமுதல் நால்வர்க்கு அறமுரைத்த பெருமானாரும் திருவாலவாயி லெழுந்தருளி யிருக்கின்றவரும் எமனுக்கு எமனாயிருப்பவரும் (காலங் கடந்த வரும்) ஆகிய சிவபெருமானிடத்து அன்புடையவர்களாவீர்கள்.

4. முடிவில்லாத புகழமைந்த எம் தந்தையாய திருவால வாயில் வரிசையுட னெழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானின் திருவடிகளை நீள நினைப்பீர்களாக.

5. அறுபானான்கு திருவிளையாடல்களை அன்பர்பொருட்டுச் செய்தருளிய நான்மாடக் கூடலாகிய மதுரையம்பதியி லெழுந் தருளி யிருக்கின்ற தலைவனாகிய சோமசுந்தரப் பெருமானை மனம் நெக்குநெக்குருகிப் பாடி அன்னவனை நாடி வாழ்வீர்களாக.

இரண்டாந் திருமுறைக்கண், ஆலவாய் நகரினைச் சுட்டித் திருநீற்றின் பெருமையினை விளக்கியமை காண்க.

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே."

(திருஆலவாய் - திருநீற்றுப்பதிகம்)

(பொ - ள்.) இத் திருப்பதிகம், மதுரைப்பதியிலாண்ட பாண்டியனுக்கேற்பட்ட கடுஞ் சுரம், வெப்பு நோய், தணித்தற் பொருட்டு அருளியமை.

பாண்டியன், புறச்சமயமாம் சமணசமயத்தைப் பின்பற்றித் தானாண்ட பெருமைமிகு ஆலவாய் அண்ணலின் அருளை மறந்து, வெப்புநோயினால் பீடிக்கப்பட்ட காலை, சமணசமயத்தாரால் முயன்றும், தீர்க்கவொண்ணாப் பெருநோயினை, பாண்டியனின் மேனியில் திருநீற்றினை யணிவித்து இப்பதிகத்தைப் பாடிப் போக்கினரென்பதையும், திருநீற்றின் பெருமையை விளக்கி யருளியமையும் அறிதற்பாற்று. இப்பதிகம் முழுமையும் சைவப்

பெருமக்கள் பொருளறிந்து போற்றித் திருநீற்றின் திருவருட் டன்மையினை யறிவரேற் சாலச் சிறந்ததும், சிவஞானத்தைத் தருமென்பதும் தீதறத் தெளிவுடனறியலாமென்பதே யெம் முடிவு.

மூன்றாந் திருமுறைக்கண் பெருமானார் ஆலவாயமர் அருளனும் சிவத்தின் பெருமையினைத் திருக்குறிப்புடனருளி யமை கருத்துட்கொள்க.

"மங்கையர்க் கரசி வளவர்கோன்பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யகன் நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே."

(பொ - ள்.) திருவருள் துணை என்றுமே நின்றிலங்கும் தன் கணவனாகிய பாண்டியன் புறச்சமயத்தைச் சார்ந்து சிவபெருமானை மறந்திருந்தும், அன்னவனின் பட்டத்தரசியாகிய பாண்டிமாதேவி சிவப்பரம்பொருளின் திருவருளை நன்கு தெளிந்த சிவஞானம் வாய்க்கப்பெற்றவளாய் நாடொறும் ஆலவாய்க்கண் அங்கயற்கண்ணியாம் அருட்சத்தியுடன் தன்னை வேண்டுவார்க்கு வேண்டுங் கருணை அளிப்பவனாய் அமர்ந்திருக்கும் திருக்கூத்தன் மதுரைக்கண் எழுந்தருளியிருக்கின்றனனென்ற திருப்பதிகத்தை யருளுடன் அருளியமை பதிக்கற்பாற்று. பாண்டி மாதேவியை மங்கையர்க்கரசியெனப் பெருமைப் படுத்தியமை தமிழகத்துத் தலைவியாயமர்ந்த பாண்டிமாதேவிக்குச் சிறப் புடைத்தெனக் கருத்தறிந்து சமணர்களோடு வாதிட்டு அவர்களை வென்று, சைவசமயத்தை மீண்டும் பாண்டி நாட்டில் நிலை நிறுவினர். அருட்பெருங் கடலாகிய அரன் திருவிளையாடல் கண்ட நான்மாடக்கூடல் சைவச் செந்நெறி தழைத்தோங்கும் அருள் நகராய்ப் பொலிவுற்றது; பொலிகின்றது.

திருநாவுக்கரசுப் பெருமானாரருளிய ஆறாந்திருமுறைக்கண் திருவாலவாயின் சிறப்பினை யருளியமை கருத்துட்செலுத்தி ஆய்க.

"வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தாயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்

தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க்கென்றும்,
சேயானைத் தென்கூடல் திரு வாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.''
(திருவாலவாய், திருத்தாண்டகம் கக - அ)

எம்பெருமான் கோலத்தினைச் சிறப்புறச் சித்திரித்தருளி யமை தெளிவின் திகழொடு தெரித்தலறிக.

மேலும் திருவாசகத் தேனை மாந்திக்களிக்க அருளிய மாணிக்கவாசகப் பெருந்தகை மதுரையம்பதிச் சிறப்பினை யெடுத்தாண்ட முறைமை தெளிகருத்தெழும் வண்ணம் அமைத் திருத்தல் திருவருட்டிறனே. செவிமடுக்க.

''செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்குந் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்(பு)ஆர் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக வொப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக் கப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்.''
(திரு வம்மானை, கக)

அடிகளருளிய அழகினை உற்றுப் பொருள் கொள்க. "அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த'' என்ற அடியினைத் தமிழ்த் தாயின் தவச்செல்வர்கள் நன்காய்வரேல், பாண்டிநாட்டினைத் தன் கருணையா லருளளித்துவரும் சிவபெருமானின் திருவருட்டிறனை யறிந்து வழிபடுவரேல் வேண்டிய நல்லெண்ணங்களினால் விழையும் கருத்திற்காய அருளுதவியினை அருளளிப்பனென்ற தன்மை திகழ்ந்து சிவபெருமானின் திருவருளால் சிறக்க வாழ்வரென் பதே உண்மையென அறிதல் நன்று.

மேற்குறித்ததாய அப்பாண்டிநாட்டுப் புகழ்ப்பதியின் சிறப் பினையும் சோமசுந்தரப் பெருமானார் அருட்டிறத்தினையும் அருளுடையண்ணலின் அருளாளப் பெருமானாரருளியமை கூர்ந்து நோக்கற்பாற்று.

''பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டக் கோவான் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.''
(திரு வம்மானை, அ)

திருவாசகம் முழுமைக்கும் எவரும் புரிந்துகொள்ளும் வழியில் பொருளுரைத்த தமிழ்நாட்டுப் பழம் பெரும்பதியாம் திருநெல்லையப்பர் அன்னை காந்திமதியின் அருட்டலத்துப் பிறந்து புகழுடன் வாழ்ந்திருந்த மதிப்பிற்குரிய, ஆராய்ச்சித் துறையறிவழகர், தமிழ்ப் பேராசிரியர், தாகூர் சட்டவிரிவுரை யாளருமாகிய திருநெல்வேலி திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., என்ற தமிழ் மகன் யாத்த உரையினை ஒவ்வொரு தமிழரும் கற்றுணர்வரேல், திருவாசகத்தேன் எத் துணைச் சிறப்புவாய்ந்த களிப்புடை அருளுடைக் கருவூலமென்னக் கண்டானந்திப்பரென்பதே யெம் கருத்தெழும் நற்கருத்தே.

இவ்விதம் புகழுடைப் பெரும்பதியாம், அம்மை அங்கயற் கண்ணியாம் மீனாட்சியம்மையும் அப்பன் சொக்கலிங்கப் பெரு மானும் அருள் வழங்குந் திருத்தலத்து முதற்கண் எம்மியக்குநர் வழிச் சொற்பொழிவாற்றப் பேறுகிடைக்க அருளளித்தவனும் அம்மை அம்பலவாணனை வணங்குகின்றும் மறைமலையடிக ளென்ற காணுவுலகவாசி.

உயிர்களின் நிலையினைத் திருவாசகத்தாய்ந்தால் வேண்டுங் கருத்துக்கள் தெளிவுறத் தெரிக்கும். உயிர் என்றுமே அழிவ தில்லை. உயிர்களுக்குப் பலபிறவிகள் உண்டு என்பதை மணிவாசகப் பெருமானாரருளிய திருவாசகத்துச் சிவபுராணத்துச் சிறப்புறக் காணலாம். அவர் துய்த்த அநுபோகத்தினை யுலகறியச் செய்திருக்குந் தன்மை சைவப் பெருமக்கள் யாவர்க்கும் ஞானசிரியனாய், ஆடகச்சீர் மணிக்குன்றும் அம்மை அம்பலவாணரின் அருளுடைச் சிறப்பினாற் றோன்றிச் சிவபெரு மானின் திருவருட்டன்மையை உலகறியச் செய்த பெருவுடைப் பிறவியென்று போற்றற்கு நம் தமிழகம் என்றும் கடப்பாடுடைய தென்பதை அடிகளாம் மறைமலை அன்னவனை அருட்குருவா யடைந்து அம்மை அம்பலவாணராம், கூத்தப் பெருமானின் திருவருட் பேற்றினைச் சிறக்க எய்தலாமென்பதே உறுதிப்பாடு. அடிகளருளிய அருளுரையைக் காண்மின்.

"பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள்கண்டின்று வீடுற்றேன்

உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா, விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்."

(சிவபுராணம்)

இத் திருமொழியினை ஆய்ந்தால், மனிதர்க்குப் பிறவிகளுண் டென்பதுவும், இவற்றையெல்லாம் நடத்துவிக்கும் இறைவ னொருவன் உண்டென்று உலகறியச் செய்ததொரு திருமொழி யெனக் கருத்துட் கொளலே, அருட்பேறெனவறிதலே சாலச் சிறப்புடைத்து.

எம் பெரும் சிறப்புடைச் சிவபெருமானின் திருவருட் டிறனைத் தமிழ்மறை தந்த மாணிக்கவாசகப் பெருமானருளிய அருள்மொழியினை அறிவுடனுய்க.

"கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே."

(சிவபுராணம்)

"வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்எம் மையா அரனேயோ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து, பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே."

(சிவபுராணம்)

(தொடரும்)

தீப நாடகங்கள்

[திரு. பா. பச்சையப்பன்]

(செல்வி, சிலம்பு ஙீச - பரல் - கூ, சகஅ ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரஸ்: அந்தக் கண்கள்—நீங்கள் செய்து கொண்ட கொடுமையை எவ்வாறு செய்ய இயன்றது? எந்தத்தீவினை அவ்வாறு செய்ய உந்தியது?

ஒதிபன்: அப்பலவன், நண்பர்காள், அப்பலவன் இக்கொடுந் தண்டத்தினை எனக்கிட்டான். அவன் கையாலன்று; என் கையால். இப்பழிகளை வைத்துக் கொண்டு கண்களால் எனக்காவதென்ன?

கோரஸ்: பழி மறக்க ஒண்ணாததுதான்.

ஒதிபன்: கண்கள் காணவிழையும்
கவினுர் பொருளும் உண்டோ
புண்களாயின கண்கள்
புகழின் அழிவும் போந்ததே.

கோரஸ்: ஊனிலும் உள்ளத்தும்
எனிந்தக் கொடுமை
தெய்வமொழி பொய்யாக
மெய்யழிந்து போயிருப்பின்.

ஒதிபன்: கால்தளை யகற்றி என் உயிரினை மீட்டவன்
அழிக, உயிரினும் இறப்பே எனக்கு
ஏற்ற நன்மை. பிறந்துவாழ்ந் தழிவதினும்
பிறந்த அன்றே இறப்பது மேல்.

கோரஸ்: அப்படி நேர்ந்திருக்க வேண்டும்
நேராமல் போனதற்கு வருந்துகிறோம்.

ஒதிபன்: தந்தையின் குருதியைச் சிந்தியவன்
தாயினை மணந்த பேயனிவன்
தெய்வம் மகிழா தீவினையன்
தீமைக்கு ஒதிபன்.

கோரஸ்: எனினும் தாங்கள் செய்து கொண்ட கொடுமை ஆய்ந்து செய்ததல்ல. குருடாகி வாழ்வதினும் இறந்து போவது மேலன்றோ?

ஒதிபன்: இந்தக் கொடுமையினும் வேறு தண்டம் எனக்கு ஏற்ற தல்ல என்றே நினைக்கிறேன். எனக்கு வேறு பாடமும்

கற்பிக்க வேண்டுமா? பார்க்குங் கண்களுடன் என் தந்தையின் கல்லறையைக் காணவேண்டுமா? முறையற்றுப் பிறந்த குழந்தைகளின் அழுகிய முகங்களைக் காணவேண்டுமா? தீப நகரத்தின் நிலை மாடங்களைப் பார்க்கவேண்டுமா? அழகிய சிற்பக்கலைகளைத்தான் காணவேண்டுமா? எதற்காக இக் கண்கள்? அவைகள் இருந்து என்ன பயன்? யானே 'குற்றஞ் செய்யாதீர்கள், தூய்மையாயிருங்கள்' என்று ஆணையிட்டுக் காத்தேன். ஆயின் யானே எல்லாக் குற்றங்களையும் செய்தவனானேன். இப்படித் தீச்செயல் புரிந்த எனக்குக் கண்கள் இருந்தென்ன பயனும், மக்கள் என் தீவினையைச் சுட்டிக் காட்டுங்கால் அதனை என் கண்களால் காணவேண்டுமா? வேண்டாம். இவற்றையெல்லாம் பார்க்க விரும்பேன். தீச்செயலையும் சொல்லக்கேளேன். செவிடாக்கிக் கொள்ள இயலுமாயின் அதனையும் ஆக்கிக் கொள்ளவே விரும்புகிறேன். இப்பாழும் உடலைக் கனியிடத்திலே இட்டு எதையுங் காணாது எத்தீங்கையும் கேளாது இருக்கவே விரும்புகிறேன். அதுவரையில் என் மனம் அமைதியுறாது. துன்பத்தினைத் தாண்டி நிற்கும் மனநிலையே அமைதி நிலையாம்.

சித்தரன் மலையே! என்னைக் காத்து வளர்த்த அம்மையே, இதற்கோ எனக்குக் காப்பளித்தாய். என்னைக் கண்டெடுத்ததும் கொன்றிருந்தால் இத்தீமைக்கு ஆளாகியிருப்பேனா? கொரிந்தமே! பொலிபனே! இக்கொடுமைக்கு ஆளாவேன் என்று நினைத்ததுண்டோ?

ஆ! காடுதாண்டி முக்கூட்டில் வந்து என் தந்தையைக் கொல்ல நின்றேனே, தீப நகரத்திற்கு என்னசெய்ய நினைந்து வந்தேன்! தந்தை, தாய், மகன், மனைவி, அன்னை என்று குழப்பிக் கொடுமை செய்யவோ யான் வந்தேன்? சொல்லொணாத் தீச்செயல்கள், இனி அவற்றைச் சொல்லேன். தெய்வத்தின்மேல் அன்பிருப்பின் என்னை! எங்கேனும் மறைத்து வையுங்கள். அன்றிக் கொன்று போடுங்கள். கடலில் இட்டு மூழ்கடியுங்கள். இக் கையினைக் கொண்டு போடுங்கள். (கைகளை நீட்டுகிறான்) முதியவர்கள் இத்தீச்சொற்களைக் கேட்டு அஞ்சி நடுநடுங்கிப் பின்னடைகிறார்கள்.

எனக்கு இரங்குங்கள். கொடுங்கள். தொட்டிழுத்துச் செல்லுங்கள்! தொடுவதற்கு அஞ்சாதீர்கள்! இத்தீவினை என்னையன்றி ஒருவரையும் சேராது. எனக்கே அதற்கான தண்டம் கிடைக்கட்டும்.

கோரஸ்: கிரியன் இதோ வருகிறார். உங்கள் விருப்பத்தினைச் செய்வதற்கு அவரே ஏற்றவராவர். உங்களுக்குப்பின் அவர் எங்களைக் காப்பவராவர்?

ஒதிபன்: அவனுக்கு என்ன சொல்வது? அவன் கண்ணில் இரக்கம் தோன்றுமா? முற்றும் அவனுக்குத் தீமை இழைத்தபின் எனக்கு என்ன நன்மை செய்வான்!

கிரியன்: ஒதிப, உனக்கு நேர்ந்த அழிவைப் பேசி நகைக்க வரவில்லை. சென்ற காலத்தில் செய்த தீமைகளைச் சுட்டிக் காட்டவும் வரவில்லை. நண்பர்காள், உயிர் கொடுக்கும் ஞாயிற்றினைப் பாருங்கள். தூய்மையற்றோர் அவன் கண்ணெதிரே நிற்கத்தகார். நிலனே, நீரோ காற்றோ தூய்மையற்றவனை இங்கிருத்தல் ஒட்டாது. உள்ளே அழைத்துக் கொண்டு போங்கள்! உறவினர்கள் தாம் இவன் ஏற்றுக் கொண்ட துன்பத்தினைக் காணவும் கேட்கவும் வேண்டும்.

ஒதிபன்: மேன்மை மிக்க அன்பனே! ஒன்றே ஒன்று நான் கேட்கிறேன். என்னைப் போன்றவன் கேட்டுப்பெற இயலாத ஒன்றுதான். தெய்வத்தின் பேரால், உன் நன்மைக்குத் தான்—எனக்காக அல்ல...........

கிரியன்: இவ்வளவு தாழ்மையுடன் என்ன கேட்கிறாய்?

ஒதிபன்: இப்போதே, இந்நாட்டைவிட்டு வெளியே தள்ளிவிடு; மனிதன் காணா இடத்திற்குக் கொண்டுவிடு.

கிரியன்: விரைவில் அவ்வாறு நடக்கும். ஆயின் தெய்வத்தின் ஆணையை எதிர்நோக்கி நிற்கிறேன்!

ஒதிபன்: தெய்வத்தின் ஆணை உனக்குத் தெரியவில்லையா? தீயது மாய்ந்து போகவேண்டுமே, இங்கே அது நிற்கிறதே!

கிரியன்: இருந்தாலும் சரியான வழிகாட்டத் தெய்வத்தினை வேண்டி நிற்கிறோம். வழி பிறக்கும்.

ஒதிபன்: இழந்த உயிருக்கா வழி பிறக்கும்? தெய்வம் பொறுக்காதவனுக்கா வழி பிறக்க வேண்டும்?

கிரியன்: தெய்வத்தின் அருளை வேண்டுவதில்லை. உனக்குத் தெய்வத்தின் அருள் வேண்டுமா?

ஒதிபன்: வேண்டும். நான் கேட்பதெல்லாம் இவைதான் உள்ளே இறந்து கிடப்பவளை எடுத்து ஈற்றுக் கடன்களை முடித்துவிடு. உனக்கு உடன் பிறந்தவள். நீ நல்லதுதான்;

செய்வாய் எனக்கு. என் தந்தையின் நாட்டில் இருந்து பழிக்கிடமாகாதவாறு வெளியே சென்று மலைப்பக்கத்தே இருந்து காலங்கழிக்க விடு.

சித்தாரன்! என்னை வளர்த்தவன் பேர், சித்தாரன்! மலைமீது இருந்து அங்கேயே மரணம் எய்துவேன். என் பெற்றோர்கள் எங்குவிட்டு இறந்துபோக விரும்பினார்களோ அங்கே சென்று இறந்துபோவேன். முதுமையோ, நோயோ, வேறேதேனும் இடையூற்றினாலோ என் வாழ்வு படுமென்று நினைக்கவில்லை. தீவினைக்கு ஆளாகவேண்டுமென்றுதானே பிறந்ததும். இறந்துபட வழிசெய்தும் உயிர்வாழ்ந்தேன் ....என்மக்கள்.......ஆண்மக்களைப் பற்றிக் கவலையுறாதே; அவர்கள் எங்குச் சென்றாரேனும் பிழைத்துக் கொள்வர். பெண்மக்கள், இளஞ்சிறு பெண்கள் என்னுடனன்றிப் பிரிந்துண்டு அறியாதவர்கள், அவர்களைப் பார்த்துக்கொள்....... ....கிரிய..............அவர்களை ஒருமுறை தொட்டு உணர்ந்து அழுதுவிட்டுச் செல்ல இடங்கொடு!

(இசுமேன், அந்திகனி, என்னும் அவ்விளஞ்சிறுமிகள் முன்னமேயே அங்கு வந்திருக்கிறார்கள். அவர்கள் ஒதிபன் முன்வந்து நிற்கிறார்கள்.)

என்ன, என் இளங்குழந்தைகள் அழுகின்றனவா? கிரியன் எனக்கிரங்கி இங்கு அனுப்பியுள்ளானா? என் உயிரே? இங்கேயா இருக்கின்றீர்கள்?

கிரியன்: இங்கேதான் இருக்கிறார்கள். அவர்கள்மீது உனக்குள்ள அன்பினை அறிவேன். எனவேதான் அவர்களை அழைப்பித்தேன்.

ஒதிபன்: கிரிய, தெய்வம் உன்னைக் காக்கும்! குழந்தைகாள்! என் அருகே வாருங்கள்! உங்கள் உடன் பிறந்தான் கைகளைத் தொட்டுப் பாருங்கள். அவைதான் இக்கண்களை இருளடையச் செய்தன.....உங்கள் தந்தையின் கண்கள் தாம் அவை. அவை நீங்கள் பார்த்தவைதாம். அவைகளும் உங்களைப் பார்த்தவைதாம். ஆயின், அவை உங்கள் தந்தையென்னும்போது தாம் செய்த தீங்கினைக் கண்டு தெரிந்து கொள்ளாதன. இப்போது அவை உங்களைக் காணமாட்டா. எனினும் அவை உங்களுடன் அழுகின்றன. இனி வரும் நாட்களில் உங்களுக்குத் துயர் நேரும். அப்போது உலகத்து வாழ்க்கையில் ஈடுகொடுக்க வேண்டும். நல்ல நாட்களும், அரசர் கொண்டாடும் நாட்களும் இனி உங்களுக்கு

மகிழ்வூட்டா. பிறர் மகிழ்ந்தாடும்போது நீங்கள் துயரத்துடன் வீட்டுக்குள் இருக்க நேரும். தக்க வயதினராகும் போது, உங்கள் பழியினைப் பாராட்டாது மணக்க முன்வருவார்களும் இருப்பார்களோ? நம்மினும் தீயரென் றுபேரெடுத்தாரும் இருப்பார்களோ? தந்தை, தந்தையினைக் கொன்றவன். மக்கள் பிறந்த அறைக்கே தீவினை செய்தோன் மக்கள் என்று எள்ளி நகையாடுவர். உங்களுக்கேற்ற கணவன் மார்களைக் காண்பீர்களோ. கணவரின்றி கன்னியராகத்தான் இருக்கக்கூடும். மெனேசுவன் மகனே! அவர்கள் உன் உறவினர்கள். அவர்களுக்கு இனி நீதான் தந்தை. அவர்களுக்கு உயிரூட்டிய நாங்கள் இனி அவர்களுக்கு இல்லை யென்பதாயிற்று. இவர்கள் இருக்க விடின்றிக், காக்கக் கணவரின்றி அலையவிடாதே! நான் உறுவதுபோல் அவர்களை அவதியுறவிடாதே! இளம் வயதினர், ஏழையர், உன்னையன்றிப் பிறர் அனைவரையும் இழந்தவர்கள். செய்வாயா? உன் கைகொடுத்து ஆணையிடு (கிரியன் கையினைக் கொடுக்கிறான்) நண்ப! குழந்தைகாள்! நீங்கள் பெரியவர்களாகும்போது பலவும் அறிந்து கொள்வீர்கள். இவற்றையெல்லாம் கேட்டுத் துன்பினை இப்போது சுமக்க இயலாதவர்கள். ஆயின் தெய்வத்தினை வணங்குங்கால், வாழ்வில் நல்லன அருளவேண்டுங்கள்!

கிரியன்: இதுபோதும் இனி நீ உள்ளே செல்லலாம் அன்றோ?

ஒதிபன்: நான் செல்லத்தான் வேண்டும்.

கிரியன்: எல்லாவற்றிற்கும் எல்லை உண்டு.

ஒதிபன்: உன்வாக்கு நிறைவேறு மன்றோ?

கிரியன்: என்ன வாக்கு?

ஒதிபன்: என்னை நாடுகடத்துவது.

கிரியன்: தெய்வம் அது செய்யும், நான் அல்ல.

ஒதிபன்: தெய்வம் எனக்காகப் பேசாது.

கிரியன்: உன் விருப்பப்படி ஆவதாக!

ஒதிபன்: (மன அமைதிபெறாதவனாக) என்னை அழைத்துப் போங்கள்.

கிரியன்: செல்க (ஒதிபன் அரண்மனை நோக்கிச் செல்கிறான். அவன் கைகள் குழந்தைகள் மேலிருக்கின்றன) ஆயின் அக் குழந்தைகளை விட்டுவிடு.

ஒதிபன்: வேண்டாம்! அவர்களை என்னிடமிருந்து பிரிக்காதே.

கிரியன்: இனியும் அரசாணை இடாதே. கீழ்ப்படிந்து நட. உன் அரசு முடிந்தது.

(ஒதிபனை அழைத்துச் செல்கின்றனர்)

கோரஸ்: திபநகரச் செல்வர்கள்! செப்புவதுங் கேண்மினோ
உபகாரி, உயர்ந்தவனும் உள்ளமறை உணர்ந்தவனும்
திபநகரம் பெருமைபடத் தீரனென திகழ்ந்தவனும்
அபசாரப் பட்டவனும் அழிந்தனனும் ஒதிபனுமே!

எனவே,

பிறந்தவர் எவரும் இறப்பது திண்ணம்
என்பதை உணர்ந்து இறக்கு மளவும்
கருத்துடன் வாழ்வைக் காத்திடல் வேண்டும்
தீவினை தொடராச் சீருடை வாழ்வினைச்
செலுத்தி உய்மின்! செலுத்தி உய்மினே!

இந்த நாடகத்தினைத் தொடர்ந்து, **கோலனத்து ஒதிபன்** என்னும் இரண்டாம் நாடகத்தில், ஒதிபன் கொலனத்தை அடைவதும் அங்கு எதனத்து மன்னன் ஆதரவால் தங்கி உயிர் விட்டதும் விளக்கப் பெறுகின்றன.

அதற்கு அடுத்த கதைத் தொடர்பு அந்திகனி என்னும் நாடகத்தால் விளக்கப் பெறுகிறது. அந்நாடகத்தில் ஒதிபனின் இரண்டு ஆண் பிள்ளைகளும் மடிந்துபோக, கிரியன் இளையவனை மிகப் பெருமை செய்து அடக்கம் செய்யவும், முதன் மகனை கழுகு நரி முதலியன பிய்த்துத் தின்க என வாளா விடுக்கவும் ஆணை பிறப்பிக்கிறான். அந்திகனி என்னும் தங்கை முதற் சோதரனுக்கு விதித்த தண்டத்தினைப் பொறுதவளாய் புதைக்க முயலுகிறாள். அது கண்டு அவளை இருட் குகையில் கிரியன் சிறைப்படுத்துகிறான். அவள் காதலனும் கிரியன் மகனும் ஆன ஏமன் என்பான் உயிர்விடுகிறான். அது பொறாளாய் அவன் தாய் உயிர்விடுகிறாள். இங்ஙனம் மூன்றும் நாடகமும் துன்பத்தின் எல்லையை எட்டி முடிகிறது.

இவ்வாறு மூன்று நாடகங்களும் ஒரு கதைத் தொடர்புடைய்பவையே ஆயினும் அவை முன் பின்னாகவே இயற்றப் பெற்றன. அந்திகனி கி. மு. 442 - 441; ஒதிபமன்னன் கி. மு. 429 - 420; கொலனத்து ஒதிபன் 401 (சொபக்கிளியர் இறந்த பிறகு) என ஸஹிவந்தன. இவைகளின் பெருமை, மாந்தர் இயல்பு எனப் பலவும் நம்மருஞ் செந்தமிழ்ச் செல்வியில் அவ்வப்போது அறிஞர் பெருமக்களால் ஆய்ந்து எழுதுதற்கேற்றன.

முற்றும்

ஆதன் அவினி

[திரு. பா. பாப்பு இராமநாதன்]

எட்டுத் தொகை நூற்களில் ஐங்குறு நூறும் ஒன்று. இஃது ஐந்து நூறுகளைக் கொண்ட குறுகிய அடிகளையுடைய நூலாகும். இந்நூலின் கண்ணுள்ள மருதத் திணையைப் பாடியுள்ளவர் ஓரம் போகியார் என்னும் புலவராவர். இவர் மருதம் பாடுதலில் வல்லுநர். புலத்துறை முற்றிய கூடலூர்க் கிழார் இந்நூலைத் தொகுத்துள்ளார். யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை தொகுப்பித்துள்ளார்.

"இந்நூலைத் தொகுத்தோரும், தொகுப்பித்தோரும் முறையே மலைநாட்டுப் புலவரும் மலைநாட்டு அரசரும் ஆதலின், ஆதன் அவினி என்னும் சேரனைத் தலைவனாகப் பெற்ற முதற் பத்தையுடைய மருதம் முதலிலும்" என்று பழைய முகவுரை கூறுகின்றது. எனவே, இவன் அரசன் என்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. ஆதன் என்ற மொழிக்கு, குரு, குருடன் என்ற பொருட்களும் காணப்படுவதால், இவன் குருவாகவேனும் அன்றிக் குருடனாகவேனும் இருந்திருத்தல் கூடும்; இவனுடைய இயற் பெயர் அவினி; சிறப்புப்பெயர் ஆதன். ஏனெனில், இவ்விரு பெயர்களும் ஒரே இயற்பெயராய் இருந்திருப்பின், முதலாம் பத்தாகிய வேட்கைப் பத்திலுள்ள ஒவ்வொரு செய்யுட்களின் முதலடியிலும் "வாழி யாதன் வாழி யவினி" எனப் பிரித்துக் கூறவேண்டுவதின்று. சிறப்புப் பெயருடன் இயற் பெயர் கூடின் அவ்வியற் பெயரைப் பின்னே கூறவேண்டுமென்பது இலக்கணம்.

> "திணைநிலஞ் சாதி குடியே யுடைமை
> குணந்தொழில் கல்வி சிறப்பாம் பெயரோ
> டியற்பெய ரேற்றிடிற் பின்வரல் சிறப்பே." (௩ சூத்திரம் ௩௯௩)

கண் பார்வை குன்றிய வீரராகவ முதலியாரவர்கள் அந்தகக் கவி வீரராகவ முதலியாரெனவும், விரைவிற் பாடும் இயல்பினையுடைய வல்லூர்த் தேவராசப் பிள்ளையவர்கள் ஆசுகவி எனவும், இயற்பெயர்க்கு முன்பு சிறப்புப் பெயர்கொண்டு அழைக்கப் படுவதைக் காண்க.

மாவிலங்கை அரசனும், ஓய்மான் நல்லியக் கோடனுக்குப் பின் அரசுபுரிந்தவனுமாகிய "ஓய்மான் வில்லியாதன்" என்பவன் ஆதன் என்னும் பெயர்கொண்டிருப்பதால், ஆதன் அவினியும், தன் ஆதன் என்னும் பெயருக்கு முன்னே, பல சிறப்புப் பெயர்களைப் பெற்றிருக்கவேண்டும். அவை நாளடைவில் மறைந்தொழிந்து ஆதன் என்னும் பெயர் எஞ்சியிருத்தல் வேண்டும்.

பின், அவினி என்னும் பெயர் மக்களால் இடப்பட்டிருக்க வேண்டும். ஆகவே, இத்தகைய காரணத்தை யூகித்தறியத்தான் நூலாசிரியரும் வாழி யாதன் அவினி என இணைத்துக் கூறாது, "வாழி யாதன் வாழி யவினி" எனப் பிரித்துக் கூறினர் போலும்.

இவராற் பாடப் பெற்ற முதல் மூவரசர் சேர சோழ பாண்டியராவர். இம் மூவரிலும் ஒவ்வொரு மரபினரிலும் ஒருவரையே பாடியிருப்பதால் இம்மூவர் காலத்திலும் இவர் வாழ்ந்திருக்க வேண்டும். அவர்கள் அரசியல் முறை பிறழாது அரசு புரிந்திருக்க வேண்டும். இப் புலவரை அவர்கள் ஆதரித்து இருக்கவேண்டும். இந்நூலில் சோழனையும் பாண்டியனையும் குடுப்பிடுகின்றார். சோழனை "வெல்போர்ச் சோழன் கடுமான் கிள்ளி" எனப் பெயர்கூறி, பாண்டியனைப் பெயர் கூறாது விடுத்தது யாது காரணம் என்பது சிந்தித்தற்குரியது. இதற்குக் கீழ்க்கண்ட செய்யுட்கள் சான்றாம்.

"பகல்கொள் விளக்கோ டிராநா ளறியா
வெல்போர்ச் சோழ ராமூ ரன்னவிவள்
நலம்பெறு சுடர்நுத றேம்ப
எவன்பயஞ் செய்யுநீ தேற்றிய மொழியே." (ஐங், செய் ருசு)

"திண்டேர்த் தென்னவ னன்னாட் டுள்ளதை
வேனி லாயினுந் தண்புன லொழுகும்
தேனூ ரன்னவிவ டெரிவளை நெகிழ
வூரி னூரனை நீதர வந்த
பஞ்சாய்க் கோதை மகளிர்க்
கஞ்சுவ லம்ம வம்முறை வரினே." (ஐங், செய் ருச)

"கதிரிலை நெடுவேற் கடுமான் கிள்ளி
மதில்கொல் யானையிற் கதழ்புநெறி வந்த
சிறையழி புதுப்புன லாடுகம
எம்மொடு கொண்மோவெந் தோள்புரை புணையே." (ஐங், செய் எஅ)

இவர்களைச் சிறப்பித்தமையால் இவர் பரிசில் பெற்றமை விளங்குகிறது.

நக்கீரரின் தந்தையின் பெயர் இன்னதென விளங்கவில்லை. அவர் மதுரையில் ஆசிரியராக விருந்தமையால், அவரை இயற் பெயர் கொண்டழைத்தல் இழுக்கென்றெண்ணி, அவரை மதுரைக் கணக்காயனார் என அழைத்தனர் போலும். அது போல இப் பாண்டியன் பெயர் கூறல் இழுக்கென வெண்ணிப் பெயர் கூறாது, பாண்டியனென அழைத்தனர் எனக் கொள்ளின் இழுக்கென்னை?

சேரர் மரபில் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என, ஆதனெனும் பெயரிய அரசனொருவன் இருந்திருக்கின்றான்.

இவனைப்போல ஆதன் அவினியும் நீண்ட பெயரையுடையவனாக விருந்திருத்தல் வேண்டும். அப்பெயர் நாளடைவில் குறைந்து, ஆதன் அவினி யென எஞ்சியிருத்தல் வேண்டும். இன்றேல், சேரமான் எனத் தொடங்கி, வாழி யாதன் என முடிந்த பெயர் ஒன்றும், சேரமான் எனத் தொடங்கி, வாழி யவினி என முடிந்த பெயர் ஒன்றுமாக இரு பெயர் வழங்கியிருத்தல் வேண்டும். அங்ஙனம் இருந்தமையாற்றான், ஓரம் போகியார், சோழன் கடுமான் கிள்ளியை வெல்போர்ச் சோழன் எனவும், கதிர்வேல் நெடுவேல் கடுமான் கிள்ளி யெனவும் இரு பெயர்கொண்டு சிறப்பித்தமை போல, ஆதன் அவினியையும் இரு பெயர்கொண்டு சிறப்பித்தார். 54ஆவது செய்யுளில் குறிப்பிடப்பட்ட திண்டேர்த் தென்னவன் என்ற பெயர் இன்ன பாண்டியனென விளங்கவில்லை. முதற் குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகள் இரண்டிலும் தென்னவன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னுள்ள பாக்கூர்ச் சாசனம் வீரராசேந்திர தேவன் மெய்க்கீர்த்தியில் பொலங்கழல் தென்னனை, சிவல்லவன் மகன் சிறுவனை என்ற வடி காணப்படுகின்றது. அதன் குறிப்புரையில் கீழ்க்கண்ட செய்திகள் காணப்படுகின்றன:

தென்னன்—பாண்டியன் போலும். சீவல்லவன் மகன் சிறுவன்—சீவல்லவ பாண்டியன் மகன். இவன் பெயர் வீரகேசரி என்பர். (தமிழ்ச் சாசனம்....பக்கம் ருஅ.)

இக் குறிப்பிலிருந்து ஓரம் போகியார் குறிப்புடன் ஒப்பு நோக்கின், தென்னன் பெயர் வீரகேசரியாக விருக்க வேண்டு மென்று தெரிகிறது. அவன் சிறந்தவனாக விருந்தமைபற்றிப் பெயர் கூறல் சிறப்பன்றென்றெண்ணிப் பாண்டியனைத் தென்னன் எனக் குறிப்பிட்டார் போலும்.

இவர் ஆதன் அவினியையும், கடுமான் கிள்ளியையும், பாண்டியனையும் மருதத் திணையில் குறிப்பிட்டிருப்பதால், இம் மூவரும் ஒரே காலத்தவராதல் வேண்டும். ஆகவே, பாண்டியன் காலம் ஆதன் அவினியின் காலமாக விருக்க வேண்டும். பாக்கூர் சாசனம் கி. பி. கoசுசு ஆம் ஆண்டு ஏற்பட்டிருப்பதால் தென்னனைக் குறிப்பிடும் சாசனம் ஏற்பட்ட காலமே ஆதன் அவினி வாழ்ந்த காலமாதல் வேண்டும். ஆதன் அவினியின் காலம் கி. பி. கக ஆம் நூற்றாண்டென்பதற்கு ஐயமில்லை. ஆகவே, அதன் சிறப்பைத் தெரிவிக்க வேண்டி வாழி யாதன் அவினி யெனக் கூறாது, வாழி யாதன் வாழி யவினி எனக் குறித்தனர் போலும்.

அர்ச்சப்பத்து

[நல்லிசைக் கவி—இளங்கோவன்]

வெவ்விய விடநாகத்தை வெங்கொடும் புலியை யஞ்சேன்
அவ்வியம் பேசு வாரை ஆக்கமில் லாரை யஞ்சேன்
செவ்விய மொழியி னாளைச் செந்தமிழ்ச் செல்வி யாளைக்
கவ்விய நெஞ்சி லாரைக் காண்பதை யஞ்சு வேனே! (க)

செந்தழல் நெருப்பை யஞ்சேன் தியநஞ் சுணவை யஞ்சேன்
வெந்தறு கண்வே ழத்தை வேற்படை தன்னை யஞ்சேன்
முந்தையோர் சங்கங் கண்ட மொய்ம்பினள் தமிழ்மி னாளைச்
சிந்தையிற் சேர்த்தி லாரைச் சேர்வதை யஞ்சு வேனே! (உ)

தீட்டிய கத்திக் கஞ்சேன் தியவர் தமக்கு மஞ்சேன்
நீட்டிய வாளுக் கஞ்சேன் நீசருக் கஞ்ச மாட்டேன்
பாட்டியன் மொழியி னாளப் பைந்தமிழ்க் குமரி யாளைக்
கூட்டிலா தவரைக் காணக் கூசுவேன் அஞ்சு வேனே! (ங)

அறமெலாங் கொன்று தீர்க்கும் அதமருக் கஞ்ச மாட்டேன்
மறமெலாங் கூட்டிச் சேர்க்கும் வண்டருக் கஞ்ச மாட்டேன்
திறமெலாஞ் சேரக் கொண்ட தீந்தமிழ்த் தெய்வப் பெண்ணாள்
உறவெலாம் இல்லா ராகும் ஊணருக் கஞ்சு வேனே! (ச)

பொய்யருக் கஞ்ச மாட்டேன் புரட்டருக் கஞ்ச மாட்டேன்
வெய்யதாம் அணுவின் குண்டை வீசுவார்க் கஞ்ச மாட்டேன்
செய்யுநற் சீரின் மிக்காள் செந்தமிழ்க் கன்னி யாளை
மெய்யுறத் தழுவி டாத வீணருக் கஞ்சு வேனே! (ரு)

அரசியற் சூதுக் கஞ்சேன் அறமிலா ராட்சிக் கஞ்சேன்
பரசுவார்க் கின்பம் நல்கும் பாந்தமிழ்ச் செல்வி யாளைத்
தருசுவை யமுத மூட்டும் தாய்த்தமிழ்த் தெய்வ மாதைக்
குறைசொலித் திரிவா ரான கொடியவர்க் கஞ்சு வேனே! (சு)

அன்பிலா தவர்க்கு மஞ்சேன் அருளிலா தவர்க்கு மஞ்சேன்
என்பெலா முருகி யோடி இதயமும் உருகும் வண்ணம்
இன்பநல் லிசைகள் பாடும் இசைத்தமி ழினியாள் தன்னை
வன்பினால் தாக்க நோக்கும் வஞ்சகர்க் கஞ்சு வேனே! (எ)

கோளரி வாய்க்கு மஞ்சேன் கொல்லுமின் னற்கு மஞ்சேன்
நீடிய வாழ்வு கொண்ட நித்தியக் கன்னி தன்னைப்
பாடுவார்க் கினிய ளாகும் பசுந்தமிழ்ப் பாவை யாளைச்
சாடுதற் கெண்ணங் கொண்ட சழக்கருக் கஞ்சு வேனே! (அ)

வெம்புயல் வீச்சுக் கஞ்சேன் வெறிமிகுஞ் சூறைக் கஞ்சேன்
கம்பனுக் கிளங்கோ வுக்குக் கற்புயர் வள்ளு வற்குத்
தெம்புறக் கவிகள் ஈந்து தெளிதமிழ் நூல்கள் கொண்ட
செம்பொருட் செல்வி யாளைச் சேவியார்க் கஞ்சு வேனே! (கூ)

வறுமையும் நோயு மஞ்சேன் மாதர்கண் வீச்சு மஞ்சேன்
பெருமையில் நிறைந்து தோன்றிப் பேச்சினிற் சிறந்து நின்று
நறுமலர்க் கவிம லர்த்தி நற்கலைத் தென்ற லாகி
வருதமிழ்ப் பாவை தன்னை வாழ்த்திடார்க் கஞ்சு வேனே! (க0)

செய்திகளும் குறிப்புக்களும்

(க) பாஸ்கரத் தொண்டைமான் நூலுக்குப் பரிசு

சிறந்த தமிழ் இலக்கிய நூலுக்கு ஆண்டுதோறும் 1000 வெண் பொற்காசுகள் பரிசு வழங்குவதென்று, அருணாசலம் படப்பிடிப்பு நிலைய உரிமையாளர் திரு. ஏ. கே. வேலன் அவர்கள் செய்துள்ள முடிவுப்படி இவ்வாண்டு திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், எம். ஏ. அவர்கள் எழுதிய 'வேங்கட முதல் குமரி வரை' என்னும் நூலுக்குச் சிறந்த அப்பரிசு அளிக்கப்பட்டது. இந் நூலாசிரியரைப் பாராட்டவும், நூலின் சிறப்பினை எடுத்துரைக்கவும் கடந்த 8-5-60இல் கோடம்பாக்கம் அருணாசலம் படப்பிடிப்பு நிலையத்தில் ஒரு விழா நடைபெற்றது. விழாவிற்குத் திரு. எஸ். மகராஜன் அவர்கள் தலைமை தாங்கினார். திரு. வேலன் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட 1000 வெண்பொற்காசுப் பரிசினைத் திரு. டி. எம். கிருஷ்ணசாமி ஐயர் அவர்கள் திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கட்கு வழங்கினர். திருவாளர்கள் கே. எம். பாலசுப்பிரமணியம், மீ. ப. சோமசுந்தரம், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம், திருவாட்டி சௌந்திரம் கைலாசம், வித்துவான் துரைசாமி, டி. கே. சண்முகம், பேராசிரியர் அ. சீனிவாசராகவன் ஆகியோர் நூலாசிரியரைப் பாராட்டிப் பேசினர். திரு. பாஸ்கரத் தொண்டைமான் அவர்கள் பாராட்டல்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசினர். திரு. ஏ. கே. வேலன் அவர்கள் நன்றி உரை நவில விழா இனிது முடிந்தது.

குறிப்பு: கலைத் துறையில் தாம் ஈட்டிய செல்வத்தை இங்ஙனம் இலக்கிய வளர்ச்சியின் ஆக்கத்திற்குச் செலவிடும் திரு வேலன் அவர்களின் தாய்மொழிப்பற்றையும், பரந்த உளப்பாங்கினையும் நூலாசிரியர், கலைச்செல்வர் திரு பாஸ்கரத் தொண்டமான் அவர்களையும் பாராட்டுகிறோம். இவர்கள் தொண்டு மேலும் சிறப்பதாக.

(உ) பெருந்தலைவர்கள் மாநாடு

மேல் திசை, கீழ்த்திசை நாடுகளிடையே நல்லுறவு வளர வழிகோலுதற்கெனக் கடந்த 16-5-60 இல் பாரிசில் பெருந் தலைவர்களான அமெரிக்கத் தலைவர் ஐசனோவர், உருசியத் தலைவர் குருச்சேவ், பிரிட்டிஷ் முதலமைச்சர் மாக்மிலன், பிரெஞ்சுத் தலைவர் டிகாலே ஆகியோரின் மாநாடு கூடிற்று. ஆனால் வருந்தத்தக்க விதத்தில், கூடிய அதே நேரத்தில் அம் மாநாடு முறிவுற்றது. "அமெரிக்க உளவு விமானம் ஊர்தி உருசிய நாட்டின்மீது பறந்தது தவறு; அதற்காக அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் மன்னிப்புக் கேட்கவேண்டும், இன்றேல் நான் இம் மாநாட்டில் பங்கு கொள்ளமாட்டேன்" என்றார் குருச்சேவ். ஐசனோவர் இதற்கு உடன்பட்டாரில்லை. பிரெஞ்சுத் தலைவர் திரு. டிகாலே இடைநின்று ஒற்றுமையை நிலைநாட்ட முயன்றும் பயனில்லாது போயிற்று. இதனால் அம் மாநாடு நடைபெறாது ஒழிந்தது. எனினும் மீண்டும் ஒரு முறை இவ் வல்லரசுகள் கூடிப் பேசி உலக அமைதிக்குப் வழிகாண வேண்டும் எனத் திரு டிகாலே முயன்று வருகிறார்.

குறிப்பு: பெருந் தலைவர்களிடையே தோன்றியுள்ள இந்த மன மாறுபாடு மீண்டும் ஓர் உலகப் போருக்கு வித்தூன்றுவதாகும் என அரசியல் அறிஞர்கள் அஞ்சுகின்றனர். அந்நிலை நிகழாவண்ணம் இறைவன் தான் இவ்வுலகைக் காத்தருள வேண்டும்.

(௩) ஸ்ரீலஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் 272ஆம் திருநாளும் காசிமடத்தார் அறக் கொடைகளும்

11-6-1960 இல் நடைபெறும் குமரகுருபர சுவாமிகளின் 272 ஆம் ஆண்டுத் திருநாளை முன்னிட்டுத் திருப்பனந்தாள் காசிமடத்துத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரானவர்கள், திருக்கேதாரம், ரிஷிகேசம், ஹரித்துவார், பிரயாகை, ஸ்ரீகாசி, திருக்காளத்தி, திருத்தணிகை, காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், சென்னை, திருவண்ணாமலை, சிதம்பரம், ஆச்சாள்புரம், சீர்காழி, வைத்தீசுவரன் கோவில், மாயூரம், திருப்பனந்தாள், சுவாமிமலை, திருவையாறு, திருப்புகலூர், திருவாரூர், திருவானைக்கா, பழனி, மதுரை, திருக்குற்றாலம், பழைய பாவநாசம், ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய திருத்தலங்களில் அந்தணர், அருந்தவர், ஏழைகள் ஆகியோருக்கு அன்னம் வழங்குதற்கென மொத்தம் 5,57,600 வெண்பொற்காசுகள் மூலதனமாக ஒதுக்கியுள்ளனர். அதிலிருந்து ஒவ்வோர் ஊர்களுக்கும் பல்வேறு செலவுத் தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அத்தொகை மொத்தத்தில் 10,219 வெண் பொற்காசுகளாகும்.

தில்லையில் பெரிய புராணச் சொற்பொழிவு நிதி: கடந்த 22-5-60 முதல் 30-5-60 முடிய, சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் நாடோறும் பெரியபுராணச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. புலவர் பெருமக்கள் பலர் ஒவ்வொரு சருக்கங்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் இதற்கென முதற் பொருளாக 7000 வெண்பொற்காசுகள் கொடுத்துள்ளனர். இங்ஙனமே மதுரை, காஞ்சிபுரம் முதலிய பதிகளிலும் திருவிளையாடற் புராணம், கந்த புராணம், திருவாசகம் ஆகிய புராணச் சொற்பொழிவுகட்குப் பல்வேறு வகையில் மூலப் பொருள் வழங்கியுள்ளனர். இவ்வகையில் கொடுக்கப் பட்டிருக்கும் மொத்தத் தொகை 42,000 வெண் பொற்காசுகளாகும்.

(௪) காஞ்சி மணிமொழியார் மணிவிழா

தென்னகத்து மொழி அரசியல் போராட்டங்களில் பங்கு கொண்டு உழைத்தவரும் 'போர்வாள்' என்னும் இதழின் ஆசிரியருமான திரு. காஞ்சி மணிமொழியார் அவர்களின் மணிவிழா கடந்த 17—5—60இல் சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் சிறப்புறக் கொண்டாடப் பட்டது. செந்தமிழ்ப் புலவர் செல்வராஜ் அவர்கள் தலைமை தாங்கினர். பல தமிழறிஞர்களும், அரசியல் தலைவர்களும் பாராட்டுரை வழங்கினர். அறிஞர் சி. என். அண்ணாத்துரை M.A., M.L.A. யவர்கள் திரு. மணி மொழியாருக்குப் பொன்னாடை போர்த்தி வாழ்த்துரை வழங்கினர். இவ் விழாத் தொடர்பாக மணிவிழா மலர் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் திரு. மணிமொழியார் அவர்கள் வரலாற்றுக் குறிப்புக்களும், அவர் ஆற்றிய அரும்பணிகளும் மிக அழகுறத் தரப்பட்டுள்ளன.

குறிப்பு: காஞ்சி மணிமொழியார் அவர்களைத் தமிழகம் நன்கு அறியும். நாடும் மொழியும் நலமுற, எண்ணத்தால்—எழுத்தால்—எழுச்சியுள்ளத்தால் நற்பணியாற்றுபவர். பொது வாழ்வுக்கெனச் சிறை வாழ்வும் பெற்றவர். அன்னாருக்கு நமது வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். இப் பெரியார் மேலும் பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டுப் பணி புரிய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

(ஞ) திரு. அண்ணல் தங்கோ பொன் விழா

தமிழன்பர், திரு. கு. அண்ணல் தங்கோ அவர்களின் பொன் விழா வாணியம்பாடியில் 13-5-60 முதல் 23-5-60 முடிய 11 நாட்கள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஆசிரியர் இளவழகனார் நாடோறும் திருக்குறள் முப்பால் விரிவுரை நிகழ்த்தினர். கடைசி நாள் மறைமலையடிகள் விழாக் கொண்டாடப்பட்டது. வித்துவான், மே. வி. வேணுகோபாலப் பிள்ளையவர்கள் தலைமை தாங்கினர். தேவநேயப் பாவாணர், கிருட்டிண மூர்த்தி, புலவர் அரசு ஆகியோர் பேசினர். ஆசிரியர் இளவழகனார் திரு அண்ணல் தங்கோவிற்குத் 'தூய தமிழ்க் காவலர்' என்னும் பட்டத்தை வழங்கினர். மாவட்ட நீதிபதி திரு. மகராசன் அவர்கள் அண்ணல் தங்கோவிற்குப் பொன்னுடை போர்த்தினர்.

குறிப்பு: பொன்விழாக் கொண்ட தூய தமிழ்க் காவலர் திரு அண்ணல் தங்கோ அவர்கட்கு நமது உளமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக. அவர் மேலும் பல விழாக்கள் கண்டு பல்லாண்டுகள் வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

(சு) கரந்தைத் தமிழ்ச்சங்க 49-ஆம் ஆண்டு நிறைவு விழா

1960, சூன் திங்கள் 5, 6 ஆம் நாட்களில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 49 ஆம் ஆண்டு நினைவுவிழா டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியாரவர்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது. பல தமிழறிஞர்கள் சொற்பொழிவாற்றினர். அத்துடன் கரந்தைப் புலவர்கள் கல்லூரி ஏழை மாணவர்களின் உணவுச் செலவிற்காக 22 ஏக்கர் நஞ்சை நிலத்தை அறக்கொடையாக வழங்கியுள்ள சங்கப் பேரன்பர் தென்னங்குடி திரு. நா. சுந்தரராச நாட்டார் அவர்களுக்கு நன்றியும் வாழ்த்துரையும் வழங்கப்பட்டன.

குறிப்பு: கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு நம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அறக்கொடை நல்கிய திரு சுந்தரராச நாட்டார் அவர்களையும் பாராட்டுகிறோம்.

(எ) தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 76 ஆம் ஆண்டு நிறைவு விழா

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின் 76-ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த மேத்திங்கள் 21, 22 ஆம் நாட்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தலைமை தாங்கினார்கள். சித்தாந்தச் சிவநெறிச் செல்வர்களும் செந்தமிழ்ப் புலவர்களும் சொற்பொழிவாற்றினர்.

குறிப்பு: இச் சைவசித்தாந்த சபை மேலும் பல்லாண்டுகள் சிவத்தொண்டு புரிந்து சிறப்புடன் விளங்குமாக.

(அ) உலகப் பெருஞ் செல்வர் ராக்பெல்லர் மறைவு

உலகத்திலேயே மிகப் பெருஞ் செல்வர் என மதிக்கப்பட்டு வந்த ஜான் டி ராக்பெல்லர் (ஜே. ஆர்) தமது 86 ஆம் அகவையில் அரிசோனாவில் டுசான் என்னுமிடத்தில் 11-5-60 இல் காலமானார். இவர் தம் தந்தையாரைப் போலவே பெருஞ் செல்வராகமட்டுமன்றிப் பெருங் கொடையாளராகவும் திகழ்ந்தார். தந்தையும் மகனும் சேர்ந்து மொத்

தத்தில் வழங்கியுள்ள நன்கொடை 875 மில்லியன் டாலர்களாகும். இப்போது நியூயார்க்கில் ஐக்கிய நாடுகளின் தலைமை நிலையம் அமைந்துள்ள இடத்தை வழங்கியவர் திரு ராக்பெல்லரேயாவர். இது அவர் கொடைகளில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

தென்னகத்தில் பல கல்விக் கூடங்கட்கும் மருத்துவ நிலையங்கட்கும் ஆக அவர் அள்ளி அள்ளி வழங்கியுள்ள நன்கொடைகள் மிகப் பல. ஆந்திர நாட்டில் விசாகப்பட்டினத்திலுள்ள மருத்துவக் கல்லூரியில் உடல் நூல் ஆராய்ச்சிக்கென 10,000 டாலர்கள் வழங்கியுள்ளார்.

வேலூரிலுள்ள கிறித்துவ மருத்துவக் கல்லூரிக்கு அறுவை மருத்துவக் கருவிகள் வாங்குவதற்கு மட்டும் 10,000 டாலர்கள்.

இவையேயன்றி இந்தியாவின் பல்வேறு பாகங்கள், கிழக்கு ஆசியா, ஐரோப்பா முதலிய பகுதிகளில் இவர் பல்லாயிரக் கணக்கான டாலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

குறிப்பு: இங்ஙனம், "ஊருணிநீர் நிறைந்தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு" என்னும் பொய்யாமொழிக்கோர் எடுத்துக்காட்டாக விளங்கிய திரு ராக்பெல்லரின் மறைவு பொருளாதார உலகிற்குப் பெரியதோர் இழப்பேயாகும்.

(க) ரெவரெண்ட் எச். ஏ. பாப்லி மறைவு

ஈரோட்டில் லண்டன் மிஷனில் 30 ஆண்டுகள் சமயத்தொண்டு புரிந்து ஓய்வு பெற்றிருந்த ரெவரெண்ட் எச். ஏ. பாப்லி அவர்கள் தமது 81 ஆவது அகவையில் குனூரில் 'சன்பீம்' என்னும் தமதில்லத்தில் கடந்த 9-5-60 இல் காலமானார்.

திரு பாப்லி அவர்கள் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார். கர்னாடக இசை முறைப்படி தமிழில் கிறித்துவப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். அனைத்திந்திய ஒய். எம். சி. ஏ. இல் சில காலம் செயலாளராகப் பணியாற்றியுள்ளார். இறுதிக்காலத்தில் ஒய். எம். சி. ஏ யின் தலைவராகவும், உள்ளூர்க் கோவாப்ரேடிவ் அர்பன் பாங்கியின் இயக்குநர்களுள் ஒருவராகவுமிருந்தார். இவருக்கு ஒரு மனைவியும் ஒரு மகனும் உளர். இந்நல்லாரை இழந்து வருந்தும் இவர் தம் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(கஉ) கல்கத்தாவில் மறைமலையடிகளாரின் மைந்தர்

தமிழ்க்கடல் மறைமலையடிகளாரின் மைந்தரும், தூத்துக்குடி, வ. உ. சி. கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமான மறை திருநாவுக்கரசு அவர்கள் கடந்த 25-4-60 முதல் 28-4-60 முடிய நான்கு நாட்கள் கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கத்தில், 'ஞானசம்பந்தரின் சிறப்பியல்புகள், 'நாவுக்கரசரின் சொல்லமிழ்தம்' உண்மைக் கவிகள் உணர்ச்சி' 'தமிழின் கதிர்காலம்' என்னும் பொருள்கள் பற்றிச் சொற்பொழிவாற்றினர். கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

இவர்தம் அண்ணனார் திருமறை மாணிக்கவாசகனார்க்கு இந்திய நடுவண் அரசினர் 'சிறந்த ஆசிரியர்' எனும் சிறப்புப்பட்டமும் பரிசும் வழங்கிச் சிறப்புச் செய்தது மிகவும் பாராட்டற்பாலதாகும்.

மதிப்புரை

"சிதம்பரத் தோத்திரத் திரட்டும் சில சிறந்த செய்யுட்களும்"

[பதிப்பாளர் சிவத்திரு, சி. ப. விசுவநாத சுவாமி அவர்கள், இதன் விலை ரூ. 1-00; கிடைக்குமிடம் 'சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்' 1/140, பிராட்வே, சென்னை—1]

பதிப்பாளராகிய அடிகள் அரும்பாடுபட்டு இந்நூலைத் தொகுத்துள்ளார்கள். நெடுநாளைக்கு முன் அச்சாகி வெளிவந்து மீண்டும் அச்சுக்கு வாராத அரும்பெரும் நூல்கள் பலவாகும். அந்நூல்கள் இறக்குந் தறுவாயிலிருக்கின்றன என்று கூறுவது மிகையாகாது. அவற்றைத் தேடித் தொகுத்து அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டுங் கடமை பொருட் செல்வமும் புலமைச் செல்வமும் ஒருங்கமைந்த சீரியோர் கடனாகும். மேலும் பொருட் செல்வமிக்க சிவபுண்ணியர் பொருளினை நல்கி வெளிப்படுத்துவிப்பதும் பொருந்துவதாகும்.

"குருநமசிவாயர்" என்னும் தமிழ் மாமுனிவர் அண்ணாமலைக் குவட்டின்கண் வீற்றிருந்தருளிய குகை நமசிவாய மூர்த்தி என்னும் சித்தர் ஒருவரின் சிறந்த மாணவராவர். அவர்தம் திருவருளாணை பெற்றுத் திருத்தில்லைக் கெழுந்தருளினர். வழிநெடுக கிட்டையிலிருந்து விழித்த போதெல்லாம் பசியுண்டாதலும், பசி நீக்கத்தின் பொருட்டு இறைவியை நோக்கித் தண்டமிழ் வெண்பாச் சோறுவேண்டிப் பாடுதலும், இறைவியும் பொற்றும்பாளத்தும் பிற கலத்தும் சருக்கரைப் பொங்கலும் பிற அமுதும் கொண்டு நல்கியருளலும் அவர்தம் வரலாற்றிற் காணப்படுகின்றன. இறைவி தன்னை இளமையளாய்ப் பாடுமாறு பணித்தருளப் பாடிய வெண்பா வருமாறு:

"முத்த நதிசூழும் முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பதத்தாளே—அத்தர்
இடத்தாளே மூவா முலைமேல்ஏ ராா
வடத்தாளே சோறுகொண்டு வா."

தில்லையம்பலவாணர் தம் திருக்கோவிற்றிருப்பணியைச் செய்விக்குமாறு பணித்தமையும், பரிசு பல வழங்கினமையும், குருநமசிவாயர் பணி பல புரிந்தமையும் வரலாற்றிற் காணப்படுகின்றன. அம்முனிவர் பெருமான் பாடியருளிய நூல்கள் 'பரம ரகசியமாலை, சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா' முதலியனவாகும். அவற்றுள் இதன்கண் 'சிதம்பர வெண்பா' முழு நூலும், 'பரமரகசிய மாலையில்' சில பாக்களும் காணப்படுகின்றன. இவையல்லாமல் சிறந்த தலைப்புக்களமைத்து அவற்றிற்கேற்ற தேவாரத் திருப்பாட்டுக்கள் பலவும் சேர்க்கப்பட்டுள்ளன. கிருட்டிண ஐயரவர்களால் இயற்றப்பெற்ற 'தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத் தமிழி'லிருந்தும், 'சேக்கிழார் பிள்ளைத் தமிழி'லிருந்தும் பல அரிய பாக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. இதுபோல் 'பிரபுலிங்க லீலை, பகவற் கீதை, திருவருட்பா' முதலிய நூல்களிலிருந்தும் தொகுக்கப்பட்டுள்ளன.

இச் சீரிய நூலைச் செந்தமிழன்பர்களும் செந்நெறிச் செல்வர்களும் வாங்கியும் வாங்குவித்தும் நற்பயனெய்துவார்களாக. மேலும் இந்நூலை வாங்கும் வாயிலாக அடிகளார் வெளியிடக் கருதும் நூல்கள் பலவும் வெளிவரப் பேருதவி புரிவார்களாக.

"தமிழின்பம்"

[பதிப்பாசிரியரும் வெளியிடுவோரும்: **என். ரத்னசபாபதி** 161, செட்டியார் தெரு, கொழும்பு-11; தனி இதழ் சதம் 50. ஆண்டு; கட்டணம் ரூ. 6-00.]

இலங்கையினின்று புதிதாக வெளிவரும் இத் திங்களிதழ் கடல் கடந்து வாழும் தமிழர்கள் தம் தாய் மொழிக்காற்றும் பெரும்பணியை எடுத்துக் காட்டுகின்றது. அங்கு வாழும் தமிழ்ப் பேராசிரியர்கள், பேறிஞர்கள் அனைவரும் இவ் விதழில் அரிய கட்டுரைகள் எழுதியுள்ளனர். தமிழ் இலக்கியம், இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு போன்ற பல துறைகளில் கட்டுரைகள் அமைந்திருப்பனவன்றித் தமிழர் சமய நெறி, கலை பற்றிய ஆய்வுக்கட்டுரைகளும் இதில் இடம் பெற்றுள்ளன. இவ்விதழ் அழகிய முறையில் குறைந்த விலையில் வெளியிடப் படுவது வெளியிடுவோரின் தமிழ்ப் பணி ஆர்வத்தைக் காட்டுகின்றது.

'சொல்லும் பொருளும்'

[ஆக்கியோர், திரு. **எம். பாலசுப்பிரமணியம்** எம். ஏ. அவர்கள் விலை ரூ. 1-88. கிடைக்குமிடம் 39. ஆயலூர் முத்தியாமுதலித் தெரு ஜார்ஜ் டவுன், சென்னை—1]

இந் நூல் பாச்செய்யுள் போன்று உரைச் செய்யுளாகத் திகழ்கின்றது. ஆசிரியரவர்கள் நனிமிக முயன்று திட்பநுட்பம் அமையச் சுருக்க விளக்கமும், இனிமையும் எழுச்சியும் பொதுள இதனை அமைத்துள்ளார்கள். இதன்கண் எழுத்தாளர்கட்கு அவர்தம் உள்ளத்துறு துணையாக நின்று அவ்வப்போது வேண்டுங் கருத்துக்களையும் அவற்றிற்கு வேண்டும் சொற்றொடர்களையும் ஒப்பில் பேராற்றலொன்று உணர்த்திவந்துள்ள உண்மையினை நன்கு விளக்கியுள்ளார். இம்மெய்ம்மை நம் தமிழகத்து மட்டுமன்றி மேற்புல நாடுகளிலும் நிகழ்ந்துள்ளமைக்குப் பல ஆங்கிலப் பேராசிரியர்களின் வரலாறு ஆங்காங்குக் குறித்துள்ளார்கள். மேலும் 'காவிரிக் கரையில் ஒருகாலை என்பது முதல் உயர்நிலைமாடம் தரும் எழுச்சி' என்பதீறாகப் பன்னிரண்டு பெருந் தலைப்புக்களும் அவற்றுட் பல பகுதிகளும் அமைத்து நூல்யாத்து விளக்கியுள்ளார்கள். திருக்குறள், திருவாசகம், பெரியபுராணம், திருவருட்பா, சங்கத்தொகை நூல்கள், பிற சான்றோர் நூல்கள் முதலியவற்றிலிருந்து பல அரிய மேற்கோள்களும் அவ்வவற்றிற்குப் பொருந்திய விளக்கங்களும் நூலை மிகவும் அணிசெய்கின்றன. இடை நிலைக்கலை மாணவர்கட்கு இந்நூல் பலவகையாலும் மொழிவளம், அறிவுவளம், நல்லொழுக்கம், நன்னெறிச் செலவு முதலிய பலவும் இனிதாகவும் எளிதாகவும் கைகூடுவதற்குப் பெருந்துணை புரியுமென்பதற்கு எட்டுணையும் ஐயமின்று.

பொதுவாகச் செந்தமிழன்பர்களும், சிறப்பாக மாணவ ஆசிரியர்களும், இதனை வாங்கியும் வாங்குவித்தும் பயனெய்துவார்களாக.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.



சென்னை மாநிலக் கல்வித்துறை இயக்குநர்
திரு. நெ து. சுந்தரவடிவேலு, எம்.ஏ., எல்.டி.